க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1925௵ ஆகஸ்ட்டு௴ | இதழ் 12.

தெய்வ வழிபாடு.

"சொல்லற் கரிய பாற்பொருளே சுகவா ரிதியே சுடர்க்கொழுந்தே
வெல்லற் கரிய மயலி லென்னை விட்டெங் கொளித்தா யாகெட்டேன்
கல்லிற் பசிய நாருரித்தார் கடுசிற் பெரிய கடலடைக்கும்
அல்லிற் கரிய வஞ்சகனுக் காளாக் கினையோ வறியேனே."

பாண்டியநாடும், நாய்க்க அரசர்களும்.

(முன்தொடர்ச்சி.)

7. திருமலை நாய்க்கர்.

பாண்டியநாட்டை அரசாண்ட வடுகு அரசரில் ஏழாவது பட்டத்தவராகிய திருமலை நாய்க்கர் என்னும் திருமலை சவுரி நாயினி அய்யலு காரு அவர்கள் தேச பாதுகாப்புக்காக தமது இராஜ்யத்திலடங்கிய 72-கொத்தளங்களையும் காவல்செய்ய ஊர்க்காவல்காரரை ஏற்படுத்தி, பிறகு அவர்களையே பாளையக்காரர்கள் என்னும் பெயரால் அழைத்து, அவர்களுக்கு சம்பளத்திற்கு பதிலாக மானியங்களை விட்டிருந்தார். அவ்வெழுபத்திரண்டு பாளையக்காரர்களின் பெயர் வருமாறு:—

1. இராமனாதபுரம் சேதுபதி
2. சிவகெங்கை உடையத்தேவர்
3. புதுக்கோட்டை தொண்டைமானார்
4. அரியலூர் நயனார்
5. துறையூர் ரெட்டியார்
6. இலுப்பூர் காமாட்சி நாய்க்கர்
7. குளத்தூர் இராமசாமித் தொண்டமானார்
8. காத்தலூர் பெரும்பூர் சீத்தக்குட்டிதேவர்
9. மருங்காபுரி பிச்சி நாய்க்கர்
10. நத்தம் லிங்கம் நாய்க்கர்
11. லக்கைய நாய்க்கர்
12. வீரனூர் காமி நாய்க்கர்
13. தோகமலை விசுவப்ப நாய்க்கர்
14. பிள்ளைமுழுங்கி மூர்த்தி நாய்க்கர்
15. ராமகிரி சாமி நாய்க்கர்
16. வீரமலைப்பாளையம் காமய நாய்க்கர்
17. பள்ளி சென்னம நாய்க்கர்
18. விருப்பாட்சி, கன்னிவாடி, ஆயக்குடி, பாம்பரை நாய்க்கர்

19. இடையகோட்டை, ஆயலூர் வல்லக் கொண்டம நாய்க்கர்
20. மடூர் நாய்க்கர்
21. கொங்கராயன் கோட்டை வாலமூர்த்தி நாய்க்கர்
22. மருளுத்து அம்மைய நாய்க்கர்
23. எமுக்காளபுரம் கூளப்ப நாய்க்கர்
24. தேவாசிமலை கோப்பிய நாய்க்கர்
25. தொட்டியன் கோட்டை திருமலை கந்த நாய்க்கர்
26. திருமலை போடி நாய்க்கர்
27. பூசாரி நாய்க்கர்
28. பெரியகுளம் ராமபத்திர நாய்க்கா
29. அப்பாச்சி கவண்டர்
30. குருவிகுளம் பெரிய வீரப்ப நாய்க்கர்
31. இரச்சக்க நாய்க்கர்
32. மதுரை பிள்ளையப்பட்டு வாக்கம நாய்க்கிர்
33. உத்தப்ப நாய்க்கர்
34. தொட்டப்ப நாய்க்கர்
35. கவண்டன் கோட்டை வெள்ளைகண்டம் சிறுபாலைக் கச்சைகட்டி காமய நாய்க்கர்
36. சிறுவலை மாதவ நாய்க்கர்
37. திருநெல்வேலி பாளையப்பட்டு ஏளாயிரம் பண்ணை வன்னியனார்
38. எட்டியாபுரம் எட்டியப்ப நாய்க்கர்
39. பாஞ்சாலங்குரிச்சிட்ட பொம்ம நாய்க்கர்
40. சிவகிரி வரகுணராம வன்னியனார்
41. சேத்தூர் திருவண்ணாத் தேவர்
42. கொல்லராயடி கலங்கா நாய்க்கர்
43. நாகலாபுரம் இரவப்ப நாய்க்கர்
44. ஊத்துமலை மருதப்ப தேவர்
45. குருக்குவெட்டி அளகத் தேவர்
46. மணியாட்சி சொக்கன்பட்டி
47. சுரண்டை நடுவக்குறிச்சி
48. தலைவன் கோட்டை
49. கொல்லம் பட்டி
50. கொல்லங் கொண்டான்
51. சிங்கம் பட்டி
52. நொக்கட்டான் செவல்
53. ஊர்க்காடு
54. கடம்பூர்
55. காடல் குடி
56. விரசிலம் பட்டி
57. களத்தூர்
58. மேமாந்தை
59. மாவிலோடை
60. ஆலங்குளம்
61. சென்னிலைக்குடி
62. பாவாலி மூவரையன்
63. தும்பிச்சி நாய்க்கர்
64. சாமி நாய்க்கர்
65. எரமலை கூளப்ப நாய்க்கர்
66. மன்னார் கோட்டை
67. ஆதத்தன்கரை பெத்தனி நாய்க்கர்
68. அளகாபுரி ரெட்டைக்குடை வன்னியர்
69. கோயம்புத்தூர் தளிபெத்தா நாய்க்கர்
70. சேலம் தலமலை ராமசந்திர நாய்க்கர்
71. தாரமங்கலம் செட்டி முதலியார்
72. யெளம்பரம்மாவல்ல ரவணப்ப நாய்க்கர்

இப் பாளையப்பட்டில் விளங்கும் நாய்க்கர் பட்ட முடையவர்களெல்லாம் ஸ்ரீ திருமலை நாய்க்கர் வம்சத்தவராவர்.

ஆகிய இவர்களன்றி இன்னும் கடுவாயல் அளகிரி நாய்க்கர், கரிப்பட்டி பொம்மிய நாய்க்கர் என்னும் இருவர்களையும் அதிகமாகக்கூறப் பட்டுள்ளது. (Vide, Oriental Historical Manuscripts, Vol. II. P. 161 to 167) இவர்கள் மேற்கூறியவூர்களிலேதாவ தொவ்வொன்றை சார்ந்தவர்களா யிருக்கலாம். இந்த எழுபத்திரண்டு பாளையப்பட்டார்களும்;

1. திண்டுக்கல் கோட்டை.
2. தாராபுரம் கோட்டை
3. கோயம்புத்தூர் கோட்டை
4. தளைய நாய்க்கன் கோட்டை
5. சத்தியமங்கலங் கோட்டை
6. அத்தியூர் கோட்டை
7. ஈரோடு கோட்டை
8. காங்கையன் கோட்டை
9. விசையநகரம் கோட்டை
10. கருவூர் கோட்டை
11. நாமக்கல் கோட்டை
12. சேந்தமங்கலங் கோட்டை

13. பெரியசேலம் கோட்டை
14. மேலூர் கோட்டை
15. சாமபள்ளிக் கோட்டை
16. காவேரிபூங் கோட்டை
17. ஆத்தூர்க் கோட்டை
18. ஆனந்தகிரிக் கோட்டை
19. மாமத்திக் கோட்டை
20. அரவக்குறிஞ்சிக் கொட்டை
21. முகலூர் கோட்டை
22. சக்கிரி கோட்டை
23. செகமகிரி கோட்டை

ஆகிய கோட்டைகளையும், மேற்கூறிய ஊர்களையும் 1630-ம் வருடம் அதாவது இற்றைக்கு 290-வருடத்திற்கு முன் காவல்காரராக ஏற்படுத்தப்பட்டு, ஊர்க்காவல் புரிந்து பாளையக்காரரானார்கள். அங்கிலேயர் ஆளுகை ஆரம்பத்தில் ஜமீன்தாராக்கப்பட்டார்கள்.

"Mr Wallace when collector of the district, He remarks that, previous to our acquisition of the district, the police of the Country appeared to have been visited in a body of people distinguished officially by the name of kavalgars or watchers. "The kavalgars" he writes, are a bold, hardy, predatory race, living generally in Jungles and fastnesses. They are composed of Various tribes, such as Udaiyan, Tevan, Padaiyachi, Kavundan, Nayianr, &" The Trichinopoly District Manual, Ch. XVIII. p. 285.

"மிஸ்டர் உவாலேஸ் ஜில்லாவுக்குக் கலக்டராக இருந்தபோது பின்வருமாறு குறிப்பிடுகிறார். நாமிந்த ஜில்லாவைப் பெறுமுன்னமே, தேச ஊர்க்காவலானது வாச்சர் அல்லது காவல்காரரென்னும் உத்தியோக முறையால் நடத்தப்பட்டதாய்த் தோன்றுகிறது. காவல்காரர் தைரியமும் திடமும் கொள்ளையாடுகிற வம்சத்தாராயும், காடுகளிலும் துருக்கங்களிலும் வசிப்பவராயுமிருந்தார்கள். அவர்கள் உடையான், தேவன், படையாட்சி, கவுண்டன், நயினர் எனப் பல குடும்பத்தில் சேர்ந்தவரா யிருந்தனர்." எனவுங் கூறியுள்ளார்.

இப்பகுதியில் ஊர்க்காவல்கார் அல்லது பாளையக்காரரது தன்மையையும் அவர்களது சாதியையும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அந்த காவல்காரர்கள் மிகுந்த தைரியமும், திடமு முள்ளவர்களா யிருந்ததோடு, கொள்ளையாடுங் குடும்பஸ்தரர்களவு மிருந்தார்களாம். (பாம்பிற்கு பாம்பின் கால் தெரிவதைப்போல், கொள்ளைக் குடும்பஸ்தருக்குத்தான், கொள்ளையடிப்பவரை கண்டுபிடிக்க முடியும்.) அதோடு காடுகளிலும் மலைகளிலும் வசிப்பவர்களாகவு மிருந்தார்களாம். இத்துணிபு வேடரைப் போன்ற சாதியாருக்குத்தான் ஏற்படக்கூடியது. மற்ற சாதியார்களுக்கு கொள்ளையையே தங்களது குலத்தொழிலாகவும், காட்டையும் மலையையுமே தங்களது வீடாகவும் கொள்ள முடியாது. அவை அவர்களுக்கு தொழிலுமல்ல, இடமுமல்ல. இப்பாளையக்காரர் அல்லது காவல்காரரை ஐந்துவகுப்பாக பிரிக்கப்படும். அரசகாவல்கார், காவல்காரர், குடிகாவல்கார், விசாரிப்பு காவல்கார், தலையாரி எனவாம்.

1. The Arasukavalgar signifies a prince or chief who holds a kaval. Tondiman (of Pudukottai, and the Poligars of Ariyalur and Udaiyarpalayam are distinguished by the appellation of Arasukavalgar.

"அரசகாவல்கார் என்றால் காவல் செய்யும் ஓர் அதிபதி அல்லது தலைவன் எனப்பொருள் கொள்ளுக. புதுக்கோட்டைத் தொண்டமான், அரியலூர், உடையார்பாளையம் பாளையக்காரர்களும் அரசகாவல்கார் என்கிறபட்டப்பெயரால் விளங்குவர்.

2. Menkavalgar signifies the head or chief kavalgar of a district. Individuals holding the kaval of one or more Villages are termed Menkavalgars. The Arasukavalgar have Menkavalgrs under them in charge of particular districts.

மென்காவல்கார் அல்லது காவல்கார மனிதர் என்றால் ஒரு ஜில்லாவுக்கு முக்கிய காவல்

கார் எனப்பொருள்கொள்ளும். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களின் காவலைக்கொண்டிருக்கிற ஒவ்வொரு தனி மனிதனும், காவல்கார மனிதன் என்று அழைக்கப்படுவான். சிலவிசேஷ ஜில்லாக்களின் பொறுப்பாக, அரசு காவல்காரர் தங்களுக்குக் கீழ் காவல்காரமனிதரை உடைதாயிருக்கின்றனர்.

3. The term Kudikavalgars is applied to the ryots of a village or district, when they are kavalgars either in their own village or in other villages or districts. Their responsibility and duties are similar to that of Menkavalgars and Arasukavalgars.

குடிகாவல்கார் என்னும் பெயர் கிராமத்தி அல்லது ஜில்லாவிலுள்ள குடியானவர்களுக்கு வழங்கும். அவர்கள் அவர்களது கிராமத்திலாவது அல்லது மற்ற கிராமக்கங்களிலாவது, ஜில்லாக்களிலாவது காவல் புரிவர். இது அவர்களுடைய கடமையும் பொறுப்பும். அரச காவல்கார், காவல்கார மனிதர் இவர்களுடையதற்கு ஒத்தது.

4. Visarippukaran is the person placed by the Men or Kudikavalgar incharge of particular village or districts. They are the Temporary servants of the Menkavalgar.

விசாரிப்புக்காரன் என்பவன் காவல்கார மனிதர் அல்லது குடிகாவல்காரர் சில விசேஷித்த கிராமங்களுக்கு அல்லது ஜில்லாக்களுக்கு பொறுப்பாய் நியமிக்கப்பட்ட மனிதனவன். அவர்கள்காவல்காரமனிதருக்கு வேண்டும் சமயத்திற்குரிய வேலைக்காரருமாவார்கள்.

5. Kulapandu or Taliari is the village watch man under the Arasu, Men, or Kudikavalgar. In some instances they are independent, and then they are the only police officers of the Village. Vide, The Trichinopoly District Manual, Ch. XVIII. P. 286.

குலபந்து அல்லது தலையாரி என்பவன் அரசுகாவல்கார மனிதர் குடிக்காவல்கார் முதலியவர்கள் கீழுள்ள கிராமக் காவல்காரன். சில விஷயங்களில் அவர்கள் அன்னியர் சாற்பற்றவராயும், கிராமத்திற்குத் தனித்த ஊர்க்காவல்கார (போலீஸ்) உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கின்றார்கள்." எனக் கூறப்பட்டுள்ளது.

The arasu and menkavalgars as well as the Kudikavalgars are responsible for all thefts Committed after sunset and before sunrise in the village of their respective jurisdictions; if they do not produce the thieves they are responsible for the amount stolen, but, if they can trace the thieves into the limits of another kavalgar, it is understood that on sufficient proof thereof, the latter becomes responsible for the amount stolen or for the production of ths thi ves. This duty and responsibility is demanded as well in towns and in villages, and if extends to all property belonging to resident inhabitants, as well to that which is kept in houses and also to cattle and sanding and reaped crops. The performance of these duties is enforced not by written regulations but by the continuation of the usages of late years." Vide, The Trichinopoly District Manual, Ch. XVIII, P. 287.

"இவர்கள் அரசகாவல்காரர், காவல்கார மனிதர், குடிகாவல்கார் இவர்களைப் போலவே தங்களது ஆக்கத்துட்பட்ட இடங்களில் சூரிய அஸ்தமனத்திறகுப் பின்னும், உதயத்திற்கு முன்னும் உள்ள சகல களவுகட்கும் பொறுப்பாளியாக விருந்தார்கள். அவர்கள் திருடர்களைக் காண்பிக்காத விஷயத்தில் அவர்களே களவுபோன தொகைக்குப் பொறுப்பாளியாவர். அவர்கள் திருடர்கள் அடுத்த காவல்காரர் எல்லையில் உள்ளதாய்த் துப்பு எடுப்பின் போதுமான உதாரணங்களுடன் அது உணரப்படின், அடுத்த காவல்காரர் களவுபோன தொகைக்கு அல்லது களவுபோன மாகூலுக்குப் பொறுப்பாகிறார். இந்தக்கடமையும், பொறுப்பும் கிராமங்களிலும், பட்டணங்களிலும் அதிகாரத்துடன் கேட்கப்படுகிறது. அது அந்நியதேச வாசிகளின் சகல பொருட்களுக்கும், வீட்டிலுள்ள சகல வற்றிற்கும், கால்நடைக்கும், நிலை நிற்கப் பொருளுக்கும், அறுவடைத் தானியங்களுக்கும் உரித்

தாயிருக்கிறது. இக்கடைமையை நடத்துதல் எழுதப்பட்ட சட்டங்களால் வற்புறுத்தப் படுகிறதல்ல, கடந்த வருடங்களில் நடந்து வரும் வழக்கங்களை அனுசரித்தே பழகிவருகிறார்கள்" என்பதாம். இக்காவல்காரர் அல்லது பாளையக்காரர்களை அங்கிலேயர் ஜமீன்தார் ஆக்கினர்.

இத்தகைய பாளையக்காரர்களைக் கொண்டு திருமலை நாய்க்கர் எதிரியைதாக்கியதோடு, பாண்டிய குல நாடார்களையும் அடக்கி வந்தனர்.

(இன்னும் வரும்.)

கடவுளை அடையும் மார்க்கம்.

(முன்றொடர்ச்சி.)

—(s)—

ஆனால் வெகுகாலம் வரையில் நான்காவது லோகமாகிய மகாலோகத்திலோ அல்லது மேல் லோகங்களிலோ அவன் தபசின் தாரதம்மியத்திற்குத் தக்கபடி வசிக்கிறான். ஆனால் பிரம்மாதி லோகங்கள் முதலாயுள்ள சகலலோகங்களும் மறுபடி உற்பத்தியை உடையன. "என்னை அடைந்தாலோ மறுபிறப்பானது கிடையாது" என்று பகவத் கீதை 8-வது அத்தியாயம் 1-ம் சுலோகத்தில் சொல்லியிருப்பதால் கர்மத்தில் நிஷ்காமியம் வேண்டும். தேகத்தால் தண்ணீர் தேவையாய் சீதோஷ்ணத்தால் சுக துக்கத்தையு மடைகிறோம். ஆகையால் சரீராதிகள் கோறியவற்றைத் தேட முயற்சிக்கும் வரையில் கர்மாக்களை செய்தவர்களாகிறோம். ஆகையால் தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதை 8-வது அத்தியாம் 5-வது சுலோகத்தில் "நஹிகச்சித்க்ஷணமபி, ஜாதுதிஷ்டத்திய கர்மகிருது, கார்யதே ஹியவசக்கர்மா, ஸர்வப்பிரகிருதிஜயாருஹ" அதாவ ஒருகாலத்திலும் நிமிஷமாவது ஒருவன் கர்மம் செய்யாதவனாயிருக்கிறதில்லை. ஏனென்றால் பாராதீனங்களாயிருக்கிற ஜனங்களெல்லோரும் சுபாவத்திலிருந்து உண்டான ஆசை துவேஷம் முதலிய குணங்களினாலே கர்மத்தை செய்ய பலவந்தம் செய்யப்படுகிறார்களென்றும், அயபடிக் கர்மம் செய்யவேண்டிய அவசியம் எப்போது நமக்கு ஏற்பட்டதோ அப்பொழுதே நமக்கு அதிகாரம் வந்துவிட்டதாகையால், "மகர்மண்ணியே வாதி காரஸ்தே மாபலேஷுகதாசன மாகர்மபலஹேதுர் பூமாதே ஸங்கோஸ்து வகர்மணி,' அதாவது அர்ச்சுனா! உனக்குக் கர்மம் செய்வதில்தானே அதிகாரமிருக்கிறது. ஆனால் ஒருபோதும் கர்ம்ம பலனில் இச்சை வைக்காதே! பலனுக்குப் பாத்திரனாகாதே. கர்மம் செய்யாமலிருப்பதில் ஆசை வைக்காதே என்று கீதை இரண்டாவது அத்தியாயம் 47-வது சுலோகத்தாலும் சொன்னார். இதனால் என்ன விளங்குகிறதென்றால், கர்மம் செய்யவேண்டுவது ஆவசியமென்றும், புத்தி வந்தவுடன் ஈசுவரார்ப்பணமாய்க் கர்மாவை செய்வானேயாகில், அப்போது கர்மபலன் இவனை ஒட்டுகிறதில்லையென்றும், தாமரை இலையானது ஜலத்தினால் எப்படி ஒட்டப்படுகிறதில்லையோ அவ்வாறு புண்ணியபாப கர்மங்களினால் நிஷ்காமியமாயும் ஈசுவரார்ப்பண புத்தியுடனும் கர்மத்தை செய்யப்பட்ட ஜீவன் ஒட்டம்படுகிறதில்லை யென்றும் 5-வது அத்தியாம் 10-வது சுலோகத்தினாலும் தெரியவருகிறது. இவ்வாறு மனதில்பற்றற்று செய்யும் பொழுது சித்தம் சுத்தியாகிறது. சித்தம் சுத்தியான மாத்திரத்தில் அப்படி அழுக்கடைந்த கண்ணாடியில் நன்றாய்ப் பார்க்கப்படாத முகமானது அழுக்கு நீங்கினவுடன் ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றதோ, பாசியால் மூடப்பட்ட கலானது பாசி நீங்கியவுடன் ஸ்பஷ்டமாய் உதவுகிறதோ, அவ்வாறு எதுவும் தனக்கு வேண்டுமென்றும், தனது சுகத்தையும், தனது பெண்டீர் புத்திரர் முதலியவர்களுடைய சுகத்தையுமாத்திரம் கோரிய ஒருவன் கிரமேண தன்னருகிலுள்ள ஜனங்களுக்கும், பிறகு தன் நகரத்திற்கும், பிறகு சமஸ்த உலகங்களுக்கும் நன்மையைக் கருதினவனாய், சுயலாபத்தை இச்சிக்காதவனாய்ச் செப்பவேண்

டிய கடமைகளை செய்தும், ஆனால் எப்பொழு பலனிச்சை யில்லாதவனும், ஈசுவரார்ப்பண புத்தியுடனும் செய்கிறானோ அப்பொழுது தான் கர்மயோகி என்று சரியாய் சொல்லுதல் பொருந்தும்.

இவ்வாறு அனுஷ்டித்தவரும் கர்மயோகிக்கு சிரத்தையென்றும், பக்தியென்றும், அன்பென்றும் சொல்லப்பட்ட உத்தமமான குணம் அவனிடம் ஜனிதமாகிறது. அப்படி பக்தி ஜனிதமாகாவிட்டால், அவன் செய்யும் எக்கர்மமும் பிரயோஜனத்திற்கு வரமாட்டாது. ஈச்வரனைத் தெரிந்து கொள்ளவோ, அல்லது அடையவோ ஒன்றும் முடியாது. ஆகையால்தான் கீதை 11-வது அத்தியாயத்தில் 54-வது சுலோகத்தில் பகவான் பின்வருமாறு கூறுகிறார்: ஓ அர்ச்சுனா! இந்த விசுவரூபமான என்னிடத்தில் வைக்கப்பட்ட பக்தியினாலேயே எதார்த்தமாகி அறிகிறதற்கும், பார்க்கிறதற்கும், என்னுடைய சுயரூபத்தை அடைகிறதற்கும் நான் தகுந்தவனாயிருக்கிறேன் என்றார். தவிரவும் 18-வது அத்தியாயத்தில் 55-வது சுலோகத்தில் நான் எவ்வித பரிமாணம், சுயரூபம் இவைகளை யுடையவனாயிருக்கிறேனோ அவ்விதமாக வென்னை பக்தியினால் அறிகிறான். அப்படி யறிந்த பிறகு உடனே பரமானந்த சொரூபமாய் விடுகிறான் என்றார். ஆகையால் ஈசுவரபக்தியினால் தான் ஒருவன் அவரை உள்ளபடி அறிந்து ஆனந்திக்கக் கூடுமென்று தெரியவருகிறது. அதாவது அந்த பக்தியானது உத்தம கல்யாண குணங்கள் நிறைந்தும், ஷட்குண சம்பத்தோடுங் கூடிய பகவானிடத்திற் மனதானது சுயமாகவே இழுக்கப்பட்டும், அதில் பற்றி நிற்கும் காலத்தில்தான் ஜனிதமாகிறது. அவ்விதம் பூர்ணமான ஈசுவரத்தன்மை, [illegible], எசஸ், கியானம், வைராக்கியம் நிறைந்ததாயும், சமஸ்தத்திற்கும்உற்பத்தி,நாசம்,போக்குவருத்துஇவைகளுக்குக்காரணபூதமாயும்,வித்தை அவித்தை இவைகளை யறிந்தவனும் தனது சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு இருக்கப்பட்ட மகா புருஷன் எவனோ, அவனைத்தான் பகவான் என்று சொல்வது வழக்கம், அவ்விதமான பகவானைக் குறித்து வேறு விதசிந்தை பற்றுதல் முதலியவை யற்றும் அதிக பிரீதியோடு அவருடைய கீர்த்தனம், ஸ்துதி, தியானம், அர்ச்சனம், நமஸ்காரம் முதலியவைகளால் ஆராதித்தலுந்தான் பக்தி என்று சொல்லப்படும். அந்த பக்தி என்பது ஈச்வரனைத் தவிர வேறொன்றிலும் ஞாபகமற்றும், சரீரத்தினால் வந்தித்து, வாக்கினால் ஸ்தோத்திரித்து, கண்களினால் கண்டு களித்து ஆனந்தித்தும் சதா பரமாத்மாவைத் தவிர வேறொன்றிலும் சிந்தை இருக்கக் கூடாமையே யுள்ளபடி பக்தியென்று சொல்லப்படும். அப்படி பக்தி வந்த பிறகுதான் ஞானமானது தோன்றும்; அதாவது பரமாத்மாவைக் காண முடியுமென்பது முன் சொல்லிய தாத்பரியத்தால் விளங்கும். எப்பொழுதும் தியானம் தோன்றியபிறகு ஞானாக்கினியால் சகல ஆகாமிய சஞ்சிதகர்மாக்களையும் பஸ்மமாகும்படி செய்து பிராரப்தத்தை மாத்திரம் சரீர மனுபவிக்கவும், தான் அதனால் பாதிக்கப்படாம லிருப்பான். எனது சகோதரர்களே! ஆகையால் மேற்கூறிய வண்ணம் ஈச்வரனை யடைய கர்மம், பக்தி, ஞானம் மூன்றும் வேண்டியதவசிய மென்றும், ஒன்றுக்கு மற்றொன்று சாதனமான தென்றும், ஆரம்பத்தில் கர்மமே முக்கியமாய் செய்யத் தக்கதென்றும், சில வேதாந்திகள் வாசகமாத்திரமாய் வேதாந்த வாக்கியங்களைப் பேசிக்கொண்டு, அக்காரணத்தால் கர்மத்தை விட்டுவிட்டுக் கர்ம பிரஷ்டர்களாவதும், கர்மத்தை யனுஷ்டிப்பதால் அடையக் கூடி[illegible]க சுத்தி கியானம் முதலியவைகள் அ[illegible]போவதுமாகி, உலகத்தில் பழிகூறு[illegible]மது க்ஷேமத்தை உத்தேசித்து யு[illegible]தியும் கியானமும் உண்டாகும்படி [illegible] நாம் பாத்திரர்களாகவேண்டும்.

இவைகளில் மு[illegible]வனிக்கத் தக்கவைகளாவன: (1) [illegible] (2) மிதம் (3) தியானம் முதலியவை[illegible] (1) சௌசம்-ட. [illegible]சுத்தி பாஹியசு[illegible]இருவகைப்படும் பாவசுத்தியென்பது [illegible] எப்பொழுதும்

சுத்தமாய் வைத்துக் கொள்ளல். பாஹியசுதித் என்பது ஜலத்திலும் மண்ணிலும் ஸ்தூல சரீரத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ளல். பாவ பாஹியமாகிய இருவித சுத்தியும் அத்யாவசியம். ஒன்றுக்கொன்று சாரமானது. சரீரம் அசுத்தமாய் இருந்தால் மனம் பற்றுதாதலால், மனதை சுத்தமாய் வைத்துக் கொள்வதற்கே சரீரசுத்தி முக்கியசாதனம்.

(2) மிதம்—ஆகாரத்திலும், நித்திரையிலும் விழித்துக் கொண்டிருத்தலிலும் மற்றெந்தப் பிரவர்த்தியிலும் மிதமாயிருக்கவேண்டியதவசியம். அப்படிக்கில்லாவிட்டால் யோகம் சித்தியாகாதென்பது ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதை 6-வது அத்தியாயம் 16-17-வது சுலோகங்களில் சொல்லியிருப்பதால் விளங்கும். (1) நாஸ்தியசனஸ்து......... (2) யுக்தாஹார விஹாரசிய.........அதாவது தியான யோகமானது அதிகமாயுண்பவன், சுத்தமாயுண்ணாதவன், அதிக தூக்கமுள்ளவன், சுத்தமாய்த் தூக்கமற்றவன் இவர்களுக்கில்லையாக. மிதமான உணவும், மிதமான நடையும், தூக்கமும், விழிப்புமுள்ளவனுக்குத் தான் துக்கத்தைப் போக்கடிக்கிறதாகிய யோகம் சித்திக்கும் என்றார். தவிர, ஆகாரம் சாத்துவிகமாயுமிருக்க வேண்டியதவசியம். இல்லாவிடின் மனோசரீரம், சூக்ஷ்ம சரீரம், ஸ்தூலசரீரம் இவைகள் கெடுத்து யோகத்தை அப்பிப்சிக்கக் கூடாமல் தடுத்துவிடும். (3) தியானம்—இது பிரதிதினத்திலும் குறிப்பிட்ட காலங்களில் தவறாது விடாமுயற்சியுடன் தனது இஷ்டதேவதையைக் குறித்து சந்தியா காலங்களில் செய்யவேண்டியதவசியம். அப்படிச் செய்யுங் காலங்களில் அநேகவிகாதங்கள் சம்பவிப்பது சகஜம். ஒரு சமயம் நேரிடினும் ஊக்கத்தை விடாது அர்ச்சுனன் கீதை 6-வது அத்தியாயம் 34-வது சுலோகத்தில் கேட்டகேள்விக்குக் கொடுத்த பதிலாகிய 35, 36 சுலோகங்களை ஞாபகத்தில் நன்றுப் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது அர்ச்சுனன் கேட்கிறான்:—கிருஷ்ண மூர்த்தியே! மனதானது சுபாவமாக சஞ்சலமுடையதாகயும், தேகேந்திரியங்களைக் கலங்கச் செய்கிறதாயும், அடங்காததாகவும், விஷயங்களில் கெட்டியாய்ப் பற்றுதலையுடையதாகவுமிருக்கிறது; அந்த மனோநிகரகத்தைக் காற்றைப்பிடித்துக் கரகத்திற்குள் அடைப்பது போல் அசாத்தியமாயிருக்கிறதென்றான். பகவான் மறுமொழிகூறுகிறார்: அடக்கப்படாத மனதையுடையவனாலே யோகமானது அடையக் கூடியதல்லவென்பது என்னுடைய நிச்சயம். அடக்கப்பட்ட மனதையுடையவனையும் அப்பியாசம், வைராக்கியம் இவ்விரண்டு உபாயத்தாலுந் தான் ஸாத்தியமென்றார். ஆகையால் மனோநிக்கிரகமும், அப்பியாசமும், வைராக்கியமும் அத்தியாவசியம். மனதை அடக்கினவிடத்து அது ஒருவனது மித்திரனாகவும், அடக்கப்படாதவிடத்து சத்துருவாகவும் ஏற்படுகிறது. ஒன்று மோக்ஷத்திற்கு சாதனமாயும், மற்றொன்று நரகத்திற்கு சற்படியாயும் ஏற்படுகிறது. ஆகையால் தான் "மனமேவஹி மனுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோகோ" என்றும், "ஆத்மைவஹி யாத் மனோபந்து ராத்மைவ ரிபுராத்மன" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மனதை நிஷ்களங்கமாயும், சுத்தமாயும் வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் ஸ்பஷ்டமாக சகல விஷயங்களையும் கிரகித்து, சம்சயங்களை நாசஞ் செய்து ஈச்வரனை யடைய முடியும்.

ஆகையால் மேற்சொல்லியவற்றை அனுஷ்டித்து விஞ்ஞானத்துடனும், மனோநிக்கிரகத்துடனும், தியானத்துடனும் இருப்போமானால், சம்சாரத்தின் வலையிற்சிக்காமல் விஷ்ணுபதம் என்று சொல்லப்பட்ட உத்தம சுகத்தை அடைவோம். அப்பொழுது தான் "பிரமவித்தியா" அவஜத்தைக் கைப்பிடியாகக் கொண்ட பிரம்மஞான சமாஜமென்றும், தியசாபிகல் சொஸைட்டி யென்றும் சொல்லப்பட்டதும், மகான்களால் ஆதரிக்கப்பட்டதுமாகிய மேற்படி சபையின் நோக்கங்களைக் கைக்கொள்ளவும் உலகநன்மையின் பொருட்டுப் பாடுபடவும் தகுந்த கருவிகளாவோம் சுபமஸ்து.

சக்ரவர்த்தி நெப்போலியன்,

இவர் ஐரோப்பா கண்டத்திலுள்ள மத்திய தரைக் கடலிலிருக்கும் தீவுகளிலொன்றாகிய கார்ச்சிக்கா தீவில் ஆஜாக்ஷியோ என்னும் பட்டணத்தில் ஷார்ல தேபோனபார்ட் (Charles de Buonaparte) என்பவருக்கும், லாட்டிஷியாரா மோலினோ என்பவருக்கும் 1769-ம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 15-ந்தேதி பிறந்தவர். தாய் தந்தைகள் ஆதியில் இத்தலிதேசத்திலுள்ள பிளாரன்சு நகரத்துக்கு அருகாமையிலுள்ள ஸான் மினியத்தோ (San-miniato) என்னும் சிங்காரமான கிராமவாசிகளான பெரிய வம்சத்தைச் சார்ந்தவர்கள். தகப்பனார் பேர்போன வர்க்கீலாகவும் பெருத்த தேசாபிமானியாகவுமிருந்ததுடன், அக்காலத்துப் பிராஞ்சியாது கொடுங்கோன்மையை நீக்க சண்டையிட்ட பயோலிக்கு மெய்காப்பாளராக இருந்து வந்தார். போரில் பிராஞ்சியர் வெற்றி பெறவே பயோலி இங்கிலாந்து சென்று அடைக்கலம் புகுவாரானார். ஷார்லோ பிறகு கார்ஸிக்கா தீவிற்கு கவர்னராக வந்த மார்போவ் (Marboeuff) பிரபுவின் நன்மதிப்பைப் பெற்று அட்டர்னி ஜெனரல் உத்தியோகத்திற்கு சமதையான புரோப்யூரர் தியூராய் (Procurer duroi) என்னும் உத்தியோகத்தை வகித்து வந்தவர். இவருடைய தாய் கோவிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்தவுடன் பிரசவ வேதனைப்பட்டுத் தற்சமயத்துக்குச் செய்யப்பட்ட கட்டிலில் விரிப்பான்களை மெத்தையாகப் போட்டு அதிற் பிரசவித்தாள். இவர் அவர்களுக்கு இரண்டாவது புத்திரர். மூத்தவர் ஜோசப்; பிறகு ஸ்பெயின் தேசத்தரசனானவர். லூசியன், லூயி, ஜெரோம் என மூன்று தம்பிகளும், எலிஸா, காரோலின், போலின் என மூன்று தங்கைகளுமுண்டு. இவர்களைத் தவிர ஐந்து குழைந்தைகள் இறந்து போயிருக்க வேண்டும். இவருடைய தாய் முப்பது வயதில் விதவையாகுமுன் பதின்மூன்று குழந்தைகளைப் பெற்ற பாக்கியவதி.

நெப்போலியன் தன் மூப்புக்காலத்தில் நல்ல ஸ்திதிக்கு வந்ததற்குக் காரணம் தன் தாயால் தானென்றும், ஒவ்வொருவரும் எப்படித் தாயால் வளர்க்கப் படுகிறார்களோ அப்படியே பின் பயனடைவார்களென்றும் சொல்லுவார். கவர்னர் மார்பவ்வின் சிபார்சின்பேரில் இவர் பிரான்கிலிருக்கும் பாயன் மிலிட்டெரிப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அக்காலத்தில் அந்தக் காலேஜ் உதவிப் பிரதமாசிரியர் பின்வரும் குறிப்பை ரிஜிஸ்டரில் எழுதியிருந்தார்.

"1779 எப்பிரல் 23-ந் தேதியாகிய இன்று 9-வருஷம் 8-மாதம் 5-நாள் ஆன வயதுடைய நெப்போலியன் தேபோனபார்ட் பிரயன்-லே ஷெத்தோவிலுள்ள இராஜாங்க மிலிட்டெரிகல் விச்சாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது."

இப்புதிய மாணாக்கன் கார்ஸிக்கனாதலால் இத்தலிபாஷையைத் தவிர பிராஞ்சிய பாஷை தெரியாது. ஆதலால் பிள்ளைகள் இவனுடன் சேர்ந்து சம்பாஷிக்கவும் விளையாடவும் முடியாமல் தனிமையாகவும் இருக்கும்படி நேர்ந்தது. இவன்மேல் பச்சாதாபம் கொண்டு திபுபி (Dupis) என்னும் உபாத்தியாயர் பிரெஞ்சு பாஷையைக் கற்பித்து வந்தார். மூன்று மாதத்திற்குள் அப்பாஷையில் அறியும்படியான தேர்ச்சியை யடைந்தான். அக்காலத்தில் பாஷையை யறிய முடியாததால் ஒதுக்கப்பட்டதேயே ஓர் அருவெறுப்பாய்ப் பிறகும் ஒருவருடனும் சேராது தன் காரியமே கருதிப்படித்து வரலாயினான். இக்குணமே எக்காலத்தும் இவனிடத்தில் மேலாடியது. இறந்த பாஷைகளாகிய லத்தீன் முதலியவற்றில் அதிக தேர்ச்சி பெறாவிடினும், யுத்தத்திற்கு முக்கியமாகிய கணிதம் முதலியவற்றில் மிக்க தேர்ச்சியடைந்து, அந்தந்த உபாத்திமார்களால் கொண்டாடப்பட்டு வந்தான். ஒருநாள் ஏதோ குற்றத்திற்காக இவனது உபாத்திமார்களில் ஒருவர் அழுக்குசட்டை போட்டுக்கொண்டு முழங்கால் மண்டியிட்டு உண்ணும்படி சொல்ல அப்படிச் செய்தபொழுது அருவருப்பை நினை

த்து, உடனே உண்டதை வாயிலெடுத்தான். அவ்விடம் வந்த கணிதபோதகர் கண்டு இப்படி செய்தது தகாது என்று சண்டித்து அவனைப் போகச் செய்தார். அச்சாலைத்தில் எல்லாக் கலாசாலைகளும் சந்நியாசிகளால் போதிக்கப் பட்டு வந்தபடியால், அவர்கள் பிள்ளைகளை வெளிவிடுவதில்லை. அந்த ஊரில் ஒரு திருவிழா நடந்தது. அதைப்பார்க்க விரும்பி எல்லோரும் சம்மதிக்கவே, நெப்போலியனது யுக்தியின் பேரில் புறச்சுவருக்குக் கீழ் ஒருவருமறியாதபடி ஒரு பெரிய வழியுண்டாக்கி எல்லோரும்சென்றனர். எப்பொழுதும் சாதாரணமான விளையாட்டு விளையாடுவதில் அதிகப் பிரியமில்லை. யுத்த நிலைமைக்குரிய விளையாட்டுகளிலேயே நோக்கமுண்டு. இதற்கு உதாரணமாக 1783, 1784-ல் அதிகப் பனி பெய்து வெளியில் போகாதபடி செய்யவே, நெப்போலியன் தன் சகோதர மாணாக்கர்களிடம் தாங்கள் இரு பிரிவாகப் பிரிந்து, ஒருவர் இந்தப் பனிக்கட்டிகளால் கோட்டை கொத்தளங்கள் அமைத்து அதைக் காக்கவும், மற்ற கட்சியார் அதை எதிர்த்துக் கைவசப்படுத்தவும் சொன்னான். அது நல்ல யோசனையாக இருந்தபடியால் அக் கோட்டையை எதிர்க்கும் வேலையே இவருக்குக் கொடுக்கப்பட்டது. இந்த விளையாட்டைப் பதினைந்து நாள் விளையாடி முடிவில் கோட்டையைப் பிடித்துக்கொண்டான்.

தன் ஜனன தேசத்தில் பற்றுடையவனென்பது அப்பொழுது நன்றாக விளங்கியது. ஒரு நாள் மத்தியானம் போஜனம் செய்து கொண்டிருக்கும்போது காலேஜுத் தலைவர் பயோலியைப்பற்றி சற்று உதாசினமாகப் பேசினார். உடனே நெப்போலியன் சரேலென எழுந்து, "அவர் ஒரு பிரபு தன் ஜன்ம தேசத்தை விசுவசித்தவர். அவருக்கு உதவியாயிருந்த என் தகப்பனாரை அவர் பிரான்சு தேசத்துடன் கார்ஸிக்காவை சேர்க்க சம்மதித்ததற்காக ஒருபொழுதும் நான் மன்னிப்பு செய்யமாட்டேன். அவருடன் இவரும் (தகப்பனாரும்) போயிருக்க வேண்டிய" தென்றான்.

இப்படிப் படித்துவருங் காலையில் ஐந்து வருஷங்களுக்குள்ளாக அங்கே கற்கவேண்டியவைகளைக் கற்றுவிட்டபடியாலும், அவனுடைய வயதும் பாரிஸிலுள்ள யுத்தவித்தியாலயத்துக்குப் போகும் காலமாயிருந்தபடியாலும் அவ்விலாகாமேற் பரிசோதகராகிய கிராலியோ வென்பவர் பின்வருமாறு பதினாறாம் லூயி அரசருக்கு எழுதிக்கொண்டார். "1769-ஆம் வருஷம் ஆகஸ்டு 15-ந் தேதியில் பிறந்த முசியே தே போனபார்ட் (நெப்போலியன்) உயரம் 4-அடி 4-அங்குலம் 10-லயன்; 4-வது வாசித்தாகிவிட்டது, தேகக்கட்டுடையவர், ஆரோக்கிய சரீரம், ஒழுக்கம் சரியானது, கணிதத்தில் முதற்றரமான பேர்வாங்கி யிருக்கிறான். வேண்டிய அளவு சரித்திரமும், பூகோளமும் அறிவான்; இவ்வளவிருந்தும் லத்தின் சொல்பம்; சிறந்த கடற்படை வீரனாவன். ஆகையால் இவனைப் பாரிஸிலுள்ள யுத்த வித்தியாலயத்துக்கு மாற்ற வேண்டும்." அப்படியே கட்டளைபிறந்து பாரிஸுக்குச் சென்று பயின்று வருவானாயினன். அவ்விடத்தில், இவனது சுறுசுறுப்பினாலும் தீவிரபுத்தியாலும் அநேகர் இவனை விசுவசித்து வந்தார்கள். பேர்போன ஆபே ரேனாவின் சிநேகமும் கிடைத்தது. அந்தப் பள்ளியில் பயிலுபவர்கள் எல்லோரும் தனவந்தர்களது மக்களாகையால், வேலைக்காரர்களுடன் சம்பிரம போஜனத்துடன் உண்டு காலங்கழித்து வந்தார்கள். நெப்போலியன் இப்பேர்ப்பட்ட வாழ்க்கையானது பழக்கப்பட்டால் யுத்தகாலத்தில் சரிவராதென்றும், அந்தப்படி செய்வது தகாதென்றும் ஒரு சாதாரண போர்வீரனைப் போல உண்டியும், தங்கள் ஆயுதங்கள் உடுப்புகள் முதலானதுகளைத் தாங்களே சுத்தப்படுத்தும்படியும் செய்யவேண்டுமென்று கண்டு ஒரு மனு கொடுத்தான். அதை எற்பாரொருவருமில்லையானாலும், இருபது வருஷம் சென்ற பிறகு 1805-ல் எகோல் மிலிட்டேர் தே போன்டேன்பிளோ (L Ecole Militaire de Fontainebeau) என்னும் யுத்த வித்தியாலயத்தை ஸ்தாபித்தான்.

1785-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பரிக்ஷிக்கப்பட்டுத் தேறிய பிறகு டாபினேயிலிருந்த

லாபேர் (Lafere) பட்டாளத்தின் இரண்டாவது லெப்டினன் (ஜமேதார்) டாக நியமிக்கப்பட்டு வாலன்வியிலிருந்த பட்டாளத்திற்குப் போய்ச் சேர்ந்தான். தனக்கு அதிக சம்பளமில்லாதிருந்தபோதிலும் தன் குடும்பத்துக்கு சௌகரியமா யிருக்கும்பொருட்டுத் தனக்கு ஒன்பது வயதுக்கு இளமையான லூயியை வரவழைத்துக்கொண்டு, சீரான குடித்தனத்தின் பொருட்டுப் பெரிய தெருவில் மாத்மாவிஸல்பொன்னின் 4-நெ வீட்டில் குடியிருந்துகொண்டு வெளியில்போன நேரம்போகவும், மத்தியானகாலத்தில் தன் தம்பிக்கு கணிதம் முதலியவைகள் சொல்லிவந்தான். ஆனால் பள்ளிக்கூடத்தி லிருந்ததுபோல் ஒருவருடனும் உறவாடாமலிருக்கவில்லை. படித்தவர்களுடன் அதிகமாகப் பழகியது மன்றி லியான் பட்டினத்திலுள்ள சர்வ சாஸ்திர சாலையாரால் கொடுக்கப்பட்ட வியாசத்தை யெழுதிப் பரிசும் பெற்றார். மிகுந்த நேரத்தைத் தான் குடியிருந்த வீட்டிற்கு எதிரிலிருந்த ஒரு புஸ்தக வியாபாரியின் சிநேகத்தை சம்பாதித்து அவர் கடையிலுள்ள புஸ்தகங்களைத் தன் பட்டாளம் இருந்த மூன்று வருஷ காலங்களிலும் திருப்பித் திருப்பி விடாது வாசித்துவந்தார்.

(இன்னும் வரும்.)

சடகோபர் என்கிற நம்மாழ்வார்.

(T. பக்தவத்ஸலம், பி. ஏ., எம். பி. பி. ஐ; அவர்களால் செய்யப்பட்ட உபந்யாசம்.)

(முன்றொடர்ச்சி.)

மதுரகவியாழ்வார் திவ்ய தேசங்களைச் சேவித்துக்கொண்டு திருவயோத்திக்கு வந்தபோது, ஆகியைக்காட்டும் ஜோதியென்று அதிதூரத்தில் அவர் கண்களுக்குப் புலப்பட, அதையே வழியாகக்கொண்டு நடக்க நடக்க, அஃதும் இழுத்துக்கொண்டே வந்து, திருக்குருநகர் என்கிற திவ்யஸ்தலத்தில் மதுரகவியாழ்வாரை மஹாகவியாழ்வார் முன் சேர்த்தது. பின் நடந்த விருத்தாந்தத்தைப் பற்றி ஒரு கிரந்தத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. "உறங்காப்புளியான திருபுளியாழ்வாரடியில், பதினாறு வயதுடையவராய், கண்களை விழித்துப் பாராமல் பத்மாஸநத்தில் ஞான முத்திரையோடே எழுந்தருளியிருக்கும் பரமாசார்யரான பராங்குசரைப்பார்த்து "இவர்க்குச் சைதன்யமுண்டோ காது கேட்குமோ என்று அறிக்கைக்காக ஒரு குண்டுக்கல்லை அவர் முன்னே திமர் என்று எடுத்துப் போட, இவரும் அவ் வோசையைக் கேட்டு திடுக்கென்று திருக்கண்களை மலரவிழித்துப் பார்க்க, மதுரகவிகளும் இவருக்கு வாக்குண்டோ, இல்லையோ என்று அறிக்கைக்காக அவரைக் குறித்து "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடைக்கும்" என்று கேட்க "அதைத்தின்று அங்கே கிடைக்கும்" என்று ஆழ்வார் அருளிச்செய்ய, மதுரகவிகள் கேட்டருளி இவர் சர்வஜ்ஞர்! இம்மஹானுபாவரை நாம் அநுவர்த்தித்து உஜ்ஜீவிக்கவேண்டும் என்று நினைத்து ஆழ்வார் திருவடிகளில் ஆஸ்ரயித்து க்ருதார்த்தராய், ஆழ்வாரைச் சதாநுபவம் பண்ணிக்கொண்டிருந்தார்" செத்தத்தின் வயற்றில் சிறியது பிறக்கையாவது. செத்தது என்பது அசித்து, அது எங்ஙனே யென்னில்; அபராணிமத்தாய் ஜடமாயிருக்கையாலே அசித்தைச் சொல்லுகிறது. அதின் வயிற்றில் சிறியது பிறக்கையாவது, சரீரத்தோடே ஆத்மாவுக்குண்டான சம்பந்தத்தை; சிறியதாவது அணுபரிமாணமாயிருக்கிற ஆத்மாவைச் சொல்கிறது, சரீரத்தோடே ஆத்மாவைச் சொல்கிறது. சரீரத்தோடே ஆத்மாவுக்கு ஸம்பந்தமுண்டானால், அதற்குப் போக்கியமும், அசித்கதமாயிருக்கிற சுக துக்கங்கள். அத்தைத்தின்று அங்கே கிடைக்கையாவது சரீரகதமாயிருக்கிற ஸுகதுக்கங்களை புஜித்துக்கொண்டு சரீரத்தையே ஆஸ்ரயித்துக்கொண்டிருக்கை." இவ்

வாறுமேற்கூறியதொரு க்ரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு பகவான் ஆழ்வாருக்கு ப்ரசன்னமாக, ருக் யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்கிற நான்கு வேதங்களையும், திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி என்கிற நான்கு திவ்யப் பிரபந்தங்களாகப் பாடியருளினர்

சடகோபர்.

என்றால் சடவாயுவை நிராகரித்தவர் என்று பொருள்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்னையின் வயிற்றில் அடங்கியிருக்கும்போது, ஆட்டம் அசைவில்லாமல் அமர்ந்திருந்த படியால் இவருக்கு இத்திருநாமம் அமைந்ததென இசைக்கக் கேட்டிருக்கிறேன். இஃதல்லாமலும் இருளைக்கடிந்து பொருளைக் காட்டுபவரென்றும், அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை விளக்குபவரென்றும், கொடுமை நீக்கிக் கோவிந்தனிடம் சேர்ப்பவரென்றும், மோகந்தன்னை நாசஞ் செய்து ஈசனிடம் சேர்த்து இதயங் களிப்பவரென்றும், பலபடியாகப் பொருள்கள் தொனியடியாகத் தோன்றும். சடகோபர் என்கிற திருப்பெயரேயன்றி, வகுளமாலை பகவானால் அளிக்கப்பெற்றவராதலால், வகுளாபரணர் என்றும், எம்மாழ்வார் பல்லோரும் நம்மாழ்வாரென்று நாதனால் விரும்பப்பட்டவரானமையின் நம்மாழ்வாரென்றும், விரோதிகளை த்வம்சம் செய்பவரானபடியால் பராங்குசர் என்றும் இவருக்குப் பலபெயர்கள் உண்டு.

இந்தஞாலம் இந்த்ரஜாலம் இஃது
இருள் தருமஞாலம்.

என்று எல்லாக் கொள்கைபோரும் எல்லாச் சமயவாதிகளும், எல்லாக்காலங்களிலும் எல்லாத் தேசங்களிலும் எல்லாவழிகளிலும் உல்லாஸமாக உபதேசஞ் செய்திருக்கிறார்கள். நல்லதென்பது நாலைந்து என்றால் பொல்லாங்கென்பது புவிநிறைந்ததாயிருக்கும். பூழுமலிந்த இந்த புன்புலாலுலகத்தில், என்னையேன் வைத்தாய் ஈசனே என்று ஒருகாலம் ஏங்கி யழுதார்! இன்னொருவரில்லாத சடகோபர் நகர உலகமே பெற்று சொல்லக்கூடும் இந்த நாச உலகத்தில், உம்மைவைத்து எம்மைப்பாட; நாமும் நமதடியார்களும் உமது செஞ்சொற்கவிகளை நெஞ்சாரக்கொண்டு, சதுரம் வாய்ந்து மதுரம்மாய்ந்த உமது கீதாமிருதத்தையும், வேதபோதத்தையும், காதாரக்கேட்டு மனமாரப் பருகி ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்து கிடக்கத்தான் உம்மை நாம் இந்த உலகத்தில் நிர்மித்தது; உம் பாடலைக்கேட்டு உலகம் பிழைத்தது என்றிவ்வாறாக ஈசன் கூறினான். இதைப்பற்றி, நாலாயிரத் திவ்ய ப்ரபந்தத்திற்குப் பீடிகையெழுதின ஒருவர், அஸஹ்யமான லீலா விபூதியிலென்னையேன் வைத்தாயென்று கேட்க, ஈஸ்வரன் எனக்குமென்னடியார்க்கும் ஸாத்வ்யமான ப்ரபந்தம் பண்ணிவைக்கவேண்டுமென வைத்தோமென்று சொல்ல அந்த உபகாரத்துக்கு பிரதி உபகாரமேது சொல்லப் போகிறேனென்று தடுமாறினதை யருளிச்செய்கிறார்" என்று குறித்திருக்கிறார். சீதைக்கு உவமானஞ் சொல்ல விரும்பிய கவிச்சக்ரவர்த்தியாராகிய கம்பநாடர், உலகத்தில் எல்லாப்பெண்களுக்கும் உவமை கற்பிக்கும்போது சாக்ஷாத் லக்ஷ்மிபோலிருக்கிறாளென்று உவமை கூறுவது சகஜமாயிருக்க, அந்த லக்ஷ்மியே இங்கு பெண்ணாய் வந்திருக்கும்போது, வேறு நான் எதைக் கொண்டு என்ன உவமானம் கூறுவது என்று திகைத்து,

செப்புங்காலைச் செங்கமலத்தோன் முதல் யாரும்
எப்பெண்பாலுங் கொண்டுவமிப்போ ருவமிக்கு
மப்பெண்டானே யாயினபோதிங் கயல்வேறோர்
ஒப்பெங்கே கொண்டெவ்வகைநாடி யுணர்கிற்போம்

என்று தடுமாறினராம்! அது போன்ற சடகோபரும் தம்மை உலகில் வைத்தது எம்மைப் பாட என்று இறைவன் சொல்வதைக்கேட்டு, நீயே என்னுள் புகுந்து நீயே பாடிக்கொண்டிருக்க, நீ செய்த உபகாரத்திற்கு நான் செய்த உபகாரம் எப்படி என்று திகைத்தனராம்.

என்னைத்தன்னாக்கி என்னால் தன்னை,
இன் தமிழ்ப்பாடிய ஈசனை ஆதியாய் நின்ற
என்சோதியை என் சொல்லி
நிற்பனோ—என்றும்

தன்சொல்லால் தான் தன்னைக் கீர்த்திக்கு

மாயன் என்றும் பற்பலவிதமாய் அவர் பாடுகிறார்—இப்போது

பாட்டென்பது அவசியமா?

என்னும் விஷயத்தைப்பற்றிச் சிறிது சிந்திப்போம். பாட்டென்பது அவசியமேயில்லை; பாட்டென்றால் பயனில்லாத வஸ்து; வசனமே எல்லா வளமுமுடையது; பாடிப்பாடி அழுதாயிற்று; பாட்டால் வந்த கேட்டாலன்றோ நாட்டில் இந்த நாசம் வந்து நேர்ந்தது. இனிமேல் பாடிப்பாடி அழவேண்டாம், வசன மெழுதுவதே வாகான செய்கை யென்று அநேகர் அபிப்பிராயப் படுகிறார்கள். இது தப்பான கொள்கையென்று எமக்குத் தோன்றுகிறது. நாட்டகந் தன்னில் பாட்டக மில்லாவிட்டால் வீட்டகமெல்லாம் காட்டகமேயாய்விடும். மேதக்க எண்ணங்கள் எங்கே மேலெழுந்து வீசுகின்றனவோ, அங்கே எண்ணுவதும் பாட்டே, பேசுவதும் பாட்டே, பிதற்றுவதும் பாட்டே! பழம் விழுவதைக் கண்டு ஆகர்ஷண சக்தியை யூகித்தறிந்த Newton என்பவரும், நீராவியைக் கொண்டு பேராவியைக் கண்டு, பூராயமாய் யந்திரங்களை புதுமையா யுண்டாக்கிய புத்தியாளரும் எண்ணியவைகளெல்லாம் இனிமையான பாடல்களேயாகும்! பாட்டிற்கும் ஸைன்ஸுக்கும் பரமவிரோதமென்று பலர் அபிப்பிராயப்படுவது பலவிதத்திலும் தப்பானதென்றே நாம் கூறுவோம். கிளிப்பிள்ளைகள் போல் சொன்னதைச் சொல்ல மட்டிப்பிள்ளைகள் போல் சொன்னதைச் செய்தலுமே யன்றி அவைகட்கு மேம்பட்டு, பலவித வேற்றுமைகளில், ஒருவித ஒற்றுமை கண்டு பிடிப்பது பாட்டின் தன்மையையேயாகும். இவ்வித பேருணர்ச்சியும் கற்பனாசக்தியும் பெருகியிருந்தால் தான், நூதன யந்திரங்களைக் கண்டுபிடிக்கவும், மறைந்துகிடைக்கும் நியதிகளை உணர்ந்து சொல்லவும் கூடும்.

ஆகவே, ஸைன்ஸ் அபிவிருத்திக்கும் பாட்டுணர்ச்சி அவசிய மென்றே தோன்றுகிறது. உள்ளத்தின் தூய்மைக்கும், ஊக்க எழுச்சிக்கும் பக்திப் பெருக்கத்திற்கும், பகவானைத் துதித்தற்கும் பாட்டென்பது பரம அவசிய மென்பது சொல்லாமலே அமையும். ஆனால் அந்தகாரத்திற் படிந்த அவிவேக குருக்கள் மாத்திரம் பாட்டினாலொன்றும் பலனில்லை என்பார்கள். இதைப்போன்ற அவிவேக உபதேசத்தை மனநோக்கிற்கொண்டா லொழியப் பாட்டென்பதை நாம் பராமரிக்கவே மாட்டோம்!

பாட்டென்பது யாது?

பாட்டென்பது, உண்மைப்பாடல், உளவெழுச்சிப் பாடலைக் குறிக்குமே யன்றி, ஊமைப் பாடல், உளறுபடிப் பாடலை ஒருபோதும் குறிக்காது. உளறுபடிப் பாடலை ஒழிக்க வேண்டும், உண்மைப் பாடலைப் போற்றவேண்டும். பாடத்தெரிவதே பரம சாம்பிராஜ்ய மென்று, பாடத்தெரியாதார் பாடியழுவதால் யாதுபயன்? கருவிலே திருவுடையவர்கள் கவிபாட வல்லரோ யன்றி, கையிலே இலக்கண முடையவர்கள் கவிபாட மாட்டார்கள். சொல்லினும் சுவை, பொருளிலும் ஆழம், நோக்கினும் தெளிவு—இவையுடையவர்களே பாட வல்லவர். காரிகை படித்த மாத்திரத்திலே கவிபாட முயல்வதைவிட, பேரிகையடித்துப் பிழைப்பதே பெருமை. இலக்கணப் புலவர்கள் சிலர் இலக்கிய வுண்மையில்லாது இடர்ப்பட்டுப் பாட ஆரம்பித்துப் பாதவிப்பது என்னென்று நாம் இயம்பலாகும்! பற்களின் நடுவில் கற்களைவைத்துப் புளிக்கும் பழத்தைக் கூடவும் கடித்து, ஆனந்த சாகரத்தி லழுந்தினாலெப்படி யிருக்குமோ அப்படியே யிருக்கும் அவர்கள் பாட்டில் அகங்களித் திருப்பது! அகராதியைத் திரும்பி ஆயிரந்தரம் பார்த்து, அளபெடை என்பதை மாத்திரம் அதிகமாய்ச்சேர்த்து எழுத்தெண்ணிச் சீர்பிரித்து, வக்கந்தாங்கிச் சோர்வு கொண்டு, தளையமைப்பதில் தலைமயக்குண்டு, எல்லாவற்றிலும் குறையும், எண்ணமில்லாததில் மிகையும், அழகின்மையில் அதிகமுகமாக அவதியுறும் பாடல்கள் பாடல்களா? ஆயின்.

உண்மைப்பாடல் யாது?

உண்மைப்பாடல் உளமெழுந்தபாடல்! அருட்பாட்டே ஆனந்தபாட்டு! அருளென்பதை Genius என ஆங்கிலர் கூறுவர். அகமின்றேல் மகிழ்வில்லை; அருளின்றேல் பாட்டில்லை. ஆனந்தமென்பது அகமது நிறைய, உணர்ச்சியென்பது உள்ளத்திற்பெருக, பக்தியென்பது பாலெனப் பொங்க, ஞானமென்பது ஜோதியைவிளக்க, அற்புதநிலையைப் பொற்புடனடையும்போது, பாட்டைத்தவிர வட்டில் என்ன தோன்றும்? இவ்விதபாட்டை யொழித்தோர் மூட்

டைதான் தூக்குவார். உளம் பொங்கியெழும் உண்மைப்பாட்டுடையோர் கம்பன் பாட்டுக்குக் காராபூந்தியையும், மூவர் தமிழுக்கு முறுக்கு மசால்வடையையும், அப்பனருளிச்செயலுக்கு அப்பம் தோசை வடையையும் உவமானமாகக் கூறார். உண்மைப்பாட்டு உளத்தைக் கரைக்கும், கரைத்த மனதையிறக்கும், இறக்கிய மனதை யெழுப்பும், ராமன்கையில் கோதண்டம் போல் விற்பன்னன் பாட்டில் சொற்கள் நிலையுறும். பண்ணும் பதமும் பாலும் தேனும் போலப் பதமடைந்திருப்பதே பாட்டின் பதமாகும்.

(இன்னும் வரும்.)

வாலிப நாடார் சங்கம், கும்பகோணம்.

நாடார் குலாபிமானிகளுக்கோர் விண்ணப்பம்.

ஐயா, நமது மதுரை நாடார் மஹாஜன சங்கத்தின் நோக்கத்தை பூர்த்திசெய்வான் வேண்டி இவண் விஜயம் செய்து சுமார் 1½ மாத காலம் கும்பகோணத்திலும் சுற்றுவட்டக் கிராமங்களிலும் சங்கம் டிருவலிங் ஏஜண்டு கனம் தி. கருப்பையா பிள்ளை அவர்கள் செய்த பிரசாரத்தின் பயனாக கும்பகோணம் ஸ்ரீ நாகேஸ்வரஸ்வாமி வடக்கு வீதியிலுள்ள நாடார் மஹாஜன சபை கட்டிடத்தின் மேல்மாடியில் சென்ற 12—4—25-ல் "வாலிப நாடார் சங்கம்" என்ற பெயரினையுடைய ஓர் ஸ்தாபனம் இவ்வூர் நாடார்குல வாலிபர்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதற்கு நமது வகுப்பினர்கள் பலர் அங்கத்தினராகச் சேர்ந்து வாலிபர்களாகிய எங்களுக்கு பலவிதத்திலும் உத்ஸாகம் அளித்து வருகிறார்கள்.

நமது ஜன சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாதது 'கல்வியே' ஆனதாலேயே நமது மதுரை மஹாஜன சங்கத்தார் வருஷவாரியில் ஏராளமான ரூபாயை கல்விக்கெனவே செலவிட்டு வருகின்றனர். நமது நகரின்கண் நகர சபையாரால் இலவசகட்டாய கல்வி போதிக்கப்பட்டு வருவதால் நாம் அதைவிடுத்து நம் சமூகத்தினருக்கு பொது அறிவை வளர்ச்சி செய்விக்க தக்க ஓர் சாதனம் செய்யவேண்டுமென்றபடி பல அபிமானிகள் அபிப்பிராயத்திற்கிணங்க ஓர் வாசகசாலை ஏற்படுத்துதல் அவசியமெனக் கண்டு அதன்படி சென்ற 22—4—25-ல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. டாக்டர் பி. வாதராஜலு நாயுடு அவர்களால் வாலிப நாடார் வாசகசாலை என்ற பெயரினையுடைய வாசகசாலை ஒன்று நமது சங்கம் ஆதாவில் திறக்கப்பட்டு அதுமுதல் நடைபெற்று வருகிறது.

தற்காலம் ஷை வாசகசாலைக்கு பல தினசரி வாராந்திர பத்திரிகை மாதாந்திர சஞ்சிகைகள் பல வந்துகொண்டிருக்கின்றன. சில அபிமானிகள் தமது சொந்த சிலவில் பத்திரிகைகள் தருவித்துக் கொடுத்தும் இன்னும் சிலர் பண உதவியும் செய்து வருகின்றனர். அப்படியிருந்தபோதிலும் நமது ஸ்தாபனம் இளமைப் பருவத்திலுள்ளதாதலாலும் தற்காலம் வருவாய்க்கும், செலவிற்கும் சரிகட்டுவதாலும் ஷை ஸ்தாபனம் நீடித்து நடைபெறவேண்டுமாயின் தக்க மூலதனம் வேண்டுவது அவசியத்திலும் அவசியமென தெள்ளிதிற் புலப்படும்.

நம் சமூகத்தாருக்கு பலவிதங்களிலும் ஊழியம் புரிந்து நமது சமூகம் மேம்பாடடையச் செய்யவேண்டுமென்ற கொள்கையையே பிரதான நோக்கமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டு பிரகாசித்துவரும். நமது வாலிப நாடார் சங்கத்தையும் ஷை வாசகசாலையையும் நம் நாடார் மரபினர் ஒவ்வொருவரும் தமது இருகண்களைப்போல் போற்றி வளர்க்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஆனதால் எங்களது சிறிய விண்ணப்பமென்னவெனில் ஷை சங்கம் வாசகசாலைக்கு ஓர் மூலதனம் திரட்டுவான் வேண்டி நாம் ஆரம்பித்திருக்கும் இவ்வேலையில் வெற்றிபெறும்வண்ணம் இதைக் கண்ணுறும் குலாபிமானிகள் ஒவ்வொருவரும் தம் தம் சக்தியானுசாரம் நன்கொடையாக பொருளுதவி செய்து ஷை நமது ஸ்தாபனங்களை நீடூழி நிலைபெற்றிருக்குமாறு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

வாலிப நாடார் சங்கத்தின் அங்கத்தினர்கள்.

தூத்துக்குடி, தக்ஷண நாடார் மகமை பரிபாலன சங்கம்.

(1860-ம் வருஷத்து 21-வது ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

2-வது ஆண்டு நிறைவு விழா வருஷாந்தர உற்சவம் 23—8—25.

இவ்வருஷாந்திர உற்சவம் நிகழும் குரோதன ஞு ஆவணி மீ 8-யில் மாலை 3-மணி முதல் விக்டோரியா எக்ஸ்டென்ஷன் ரோட்டில் மேற்படி சங்கம் ஆபீசுக்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிற கொட்டகையில் நடைபெறும். அப்பொழுது ஸ்ரீமான் வக்கீல்

D. தாமஸ் நாடார் அவர்கள் பி. ஏ.,
அக்கிராசனம் வகிப்பார்கள்.

தக்ஷண நாடார்களனைவரையும் வரும்படியாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

விஷயங்கள்.

1. வஷாந்தர ரிப்போர்ட்டு வாசித்தல்.
2. தக்ஷண நாடார்களின் மகமை விஷயமான காரியங்கள் தீர்மானித்தல்.
3. எக்ஸியூட்டி கமிற்றி மெம்பர்கள் நியமனம்.
4. மிகவும் அருமையான சங்கீத கச்சேரி ஆசாரச் சீர்திருத்தம் மகமை விருத்தி செய்தல் முதலியவைகளைப் பற்றி விசேஷித்த உபந்நியாசங்கள் இடை இடையே நடைபெறும்.

A. C. பால நாடார்,
(பிரசிடென்டு.)

ச. உ. தங்கவேல் நாடார்,
(வைஸ் பிரசிடென்டு.)

ஏ. சுவாமிபடியான் நாடார்,
(வைஸ் பிரசிடென்டு.)

Y. G. பொன்னையா நாடார்,
(செக்ரட்டரி.)

S. R. M. சின்னக்கனி நாடார்,
(அசிஸ்டண்டு செக்ரட்டேரி.)

கொழும்பு முத்துச்சிலாபம், இரண்டு முத்துகள்.

—(s)—

(1) "ஜெயகாந்த ரசம்" எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து. இது ஒரு குடும்ப வைத்தியன். ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள். விலை புட்டி 1-க்கு ரூ. 2-0-0

(2) "ஜெயாஞ்னம்" எல்லா நோவுகளையும் வலிகளையும் உடனே குணப்படுத்தும். திவ்விய மருந்து. விலை புட்டி 1-க்கு அ. 12

சச்சிறு விளை ஸ்ரீமான் கெ. கலியாண சுந்தர நாடார் எழுதுகிறார்:—தங்களிடம் வாங்கிய "ஜெயகாந்த ரசம்" "ஜெயாஞ்சனம்" என்ற மருந்துகளை நண்பர்களுக்கும் கொடுத்து நானும் உபயோகித்து பார்த்ததில் மிகுந்த திருப்தியடைந்தேன். அஜீர்ணத்திற்கும், வாதஉளைச்சலுக்கும் தங்கள் ஜெயகாந்த ரசம் கைகண்ட மருந்தாயிருக்கிறதென்று நண்பரொருவர் வெகுவாய் புகழ்ந்துரைத்தார். ஜலதோஷத்திற்கும் தலைவலிக்கும் "ஜெயாஞ்சனை" உபயோகித்ததில் அமிர்தாஞ்சன், விட்டில்ஸ் ஒரியண்டல் பாம் போன்ற பிரக்கியாதி பெற்ற மருந்துகளுக்கு ஒசமாயும், மற்றுமனேக பாம்களைவிட பன்மடங்கு சிறந்ததெனவும் அனுபவ பூர்வமாயறிந்தேன்.

கொழும்பு பிரபல வர்த்தகராகிய ஜனாப். அ. ரூ. முகமது சாலீஹு அவர்கள் எழுதுவதை கவனியுங்கள்:—

நெடுநாளாக டாக்டர் வரதராஜலு அவர்களின் மின்சார ரசத்தை உபயோகித்து வந்தயாம் அதற்குரிய சகல மேலான குணங்களும் "ஜெயகாந்த ரச"த்தில் இருப்பதாய் பிரதியக்ஷமாயறிந்து சந்தோஷிக்கிறோம்.

கிடைக்குமிடம்:—
P. P. K. மாணிக்க வாசகம்.
52. செட்டித்தெரு, கொழும்பு.
ஏஜெண்டுகள் தேவை.

இந்துமதத்தில் ஸ்திரீகளின் நிலைமை.

(அபேதாநந்தஸ்வாமிகள்.)

உபநிஷத்துக்களையும், வேதங்களின் தத்துவங்களையும் பற்றி சொல்லப்பட்டிருப்பதை வாசித்தவர்கள் வேதசாஸ்திர நிபுணராகிய யாக்ஞவல்கியருடன் ரிஷிகளுக்கு சமானமான நிலைமையுடைய கார்க்கி, மைத்திரேயி என்னும் இருபெண்மணிகளும் வாதாடியது அறிவார்கள். அப்பேர்ப்பட்ட காலங்களில் அநேக பெண்முனிகள் மத்தியஸ்தர்களாக இருந்திருக்கிறார்கள். வேதாந்த பாஷியக்காரராகிய ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் மற்றொரு சாஸ்திர நிபுணரோடு வாதாடும்போது ஓர் இந்தியப் பெண்மணி சபா நாயகம் வகித்திருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட சாதனங்களிருக்கும்போது, பாதிரியார்கள் இந்திய ஸ்திரீகளுக்கு வேதம் முதலியவை படிக்க இடம் கொடுப்பதில்லையென்கிறார்கள். வேதத்தில் கலியாணமான ஒரு புருஷன் பத்தினியின்றி சுப காரியமாவது, சிராத்த முதலிய பிதிரு கருமங்களாவது யாகயக்ஞங்களாவது செய்யக்கூடாதென்றிருக்கிறது; அப்படி மீறிச்செய்தாலும் பூர்ணபலனைப்பெறான். ஸ்திரீகள் பர்த்தாவினுடைய ஆன்மலாபத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்; சம்ஸ்கிருதத்தில் பத்தினிக்கு 'சகதர்மிணி' என்றுபெயர். சில ஸ்திரீகள் சில பாகங்களைப் படிக்கவும், சில கருமங்களை செய்யவுங் கூடாதென்றே நிபந்தனையிருப்பதுண்மையாயினும், பரிபக்குவமாகாத சில ஆடவர்கள் வேதத்திற் சில பாகத்தைப் படிக்கக்கூடாதென்பது போலத்தான்.

வேதம் உண்டான காலத்திலிருந்து புராண இதிகாசங்களுண்டாகிய காலத்திற்கு வந்தால் அங்கும் இவ்விதமான சமத்துவமே காணப்படுகிறது. பின் யிச் சட்டதிட்டங்களும் ஒரேவகையாகவே யிருக்கின்றன. இதிகாசங்களில் முதன்மையாகிய இராமாயணத்தை வாசித்தால், கதாநாயகியாகிய ஸ்ரீ சீதாதேவியின் குணம் எவ்வளவு சிரேஷ்டமாக விருந்தது என்று அறிவார்கள். சீதையானவள் உத்தம த்தினியாயும், சிரேஷ்டமான தாயாகவும், உத்தமகுணமுடைய இராணியாகவும் இருந்தால்; நற்குணம், கற்பு, தயை, ஞானமே பூஷணமாக நின்றாள். எல்லா ஜாதிகளுக்கும், மதஸ்தர்களுக்கும் உபமானமாக இன்னும் சொல்லப்படுகிறது. உலகத்திலுள்ள எந்த தேசசரித்திரத்திலும் சீதைக்கு இரண்டாவதாக சொல்ல ஒருவரும் அகப்பட மாட்டார்கள். கிறிஸ்தவர்கள் கிறீஸ்துவானவர் எப்படிக் கொண்டாடப் படுகிறாரோ அப்படியே சீதையும் கொண்டாடப்படுகிறாள். சர்வ வியாபகனாகிய அருட் பெருஞ்சோதி ஆணிடத்தில் ஆவிர்ப்பவிப்பதுபோல் பெண்ணிடத்திலும் ஆவிர்ப்பவிப்பார் என்று கொள்ளுவது இந்தியா ஒன்றுதான்.

மஹாபாரதத்தில் தனது யோகாப்பியாசத்தால் சகல சம்பத்தையும் அடைந்த சுலபா என்பவள் ஜனக மஹாராஜனுடைய சபையையடைந்து காட்டியவையைப் பற்றி சொல்லப்படுகிறது. இதனால் ஸ்திரீகளும் யோகாப்பியாசம் செய்தார்களென்று ஏற்படுகிறது. ஞானத்தில் விசேஷித்த ஸ்திரீ இரத்தினங்களை இன்னும் இந்தியாவில் காணலாம். இவர்களில் அநேகர் புருஷர்களுக்கு குருவாக இருக்கிறார்கள். ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சருக்கு யோகத்திற் றேர்ந்த ஒரு ஸ்திரீ சந்நியாசியால் வேதாந்த வுண்மை போதிக்கப்பட்டது.

மதசம்பந்தமாக ஏற்பட்ட உயர்ச்சியைப் போன்று, ஸ்திரிகளுக்கு லௌகிக விஷயங்களிலும் புருஷர்களைப்போல் சமத்துவம் இருக்கிறது. முற்காலம் தொட்டு ஸ்திரீகள் சொத்துக்கு பாத்தியஸ்தர்களாக விருக்கிறார்கள். அவர்கள் நியாயஸ்தலமடையவும், தங்கள் குறைகளைத் தாங்களே எடுத்து வாதிக்கவும் நியாயத்தையும் காப்பையும் பெறவும் உரிமையுண்டு.

ஷேக்ஸ்பியர் நாடகங்களுக்கு மேற்பட்ட சாகுந்தலம் என்னும் உயர்தர நாடகத்தை வாசித்தவர்கள் துஷ்யந்த மஹாராஜனது சபை

யில் தனக்குள்ள குறைகளை எடுத்துச் சொல்லி உரிமை பெறவாதித்தாள். இருக்கு வேதத்திலும் இப்பேர்ப்பட்ட சமாசாரங்கள் பத்தாவது ஸ்கந்தத்தில் நூற்றெட்டாவது சுலோகத்தில் காணப்படுகிறது. கி. மு. இரண்டாயிரவாண்டுகளுக்கு முன்னர் ஸ்திரீகள் சத்துருக்களை ஜெயிக்கச் சென்றதாக ஏற்படுகிறது. தன் காலத்தில் விசேஷ யோக்கியதை பெற்றிருந்த சாமா என்னும் பெண்மணி தன் புருஷனால் திருடர்களைப் பிடித்து அடக்கும்படி அனுப்பப்பட்டு, அவர்களுடைய மறைவிடமறிந்து அக் கும்பலை ஒழித்தாள்.

இருக்குவேதம் ஐந்தாவது ஸ்கந்தத்தில் நமுசி இராஜன் தன் சத்துருக்களை ஜெயிக்கும்படித் தன் பத்தினியை யனுப்பியதாக எழுதப்பட்டிருக்கிறது. அவள் அப்படியே சண்டைசெய்து ஜயமடைந்தாள். ஸ்திரீகள் இராஜதந்திரிகளாயும், அரசாட்சி செய்ததாகவும், நீதிசெலுத்தியதாகவும் அநேக ஆதாரங்களிருக்கின்றன. தங்கள் இராஜ்ஜியங்களை நிருவகித்து வந்த இராணிகளைப் பற்றி இந்தியாவில் அநேக கதைகளுண்டு. இக்காலத்தில் கூட சத்துருக்களுக்கு இடங்கொடுக்காது காத்து வந்த அநேக ஸ்திரீகளிருக்கிறார்கள். 1857-58-ஆம் ஆண்டுகளில் இந்திய கலகம் நடந்த காலத்தில் ஜான் இராணியார் ஆங்கிலேய சைந்நியாசிகளை மீறுதபடி அடக்கி எதிர்த்ததாக இந்து தேச சரித்திரம் கூறுகிறது. அவள் குதிரைப்படைத் தலைவனைப்போல் போர்க்கோலங்கொண்டு ஆங்கிலேயரை யெதிர்த்துப் போர்களத்தில் 1858-ம் வருஷம் ஜூன் மாதம் வீரசொர்க்கமடைந்தாள். சர் ஹியு ரோஸ் (Sir Hugh Rose) என்பவர் எதிரி சைந்நியத்தில் அதிதீரமாக நின்று போர் புரிந்தது பெண்மணி என்று அறியாமற் போன போதிலும் ஜான் இராணி தான் என்று எழுதியிருக்கிறார். சொற்ப காலத்திற்கு முன் ஓர் இந்து ஸ்திரீயாகிய அயூஸ்கவுர் என்பவள் ஆங்கிலேய இராஜாங்கத்தின் உதவியின் பேரில் மேற்கு மாகாணங்களிலுள்ள பாட்டியாலா இராச்சியத்திற்கு ராணியாக ஏற்படுத்தப்பட்டு, ஆங்கிலேய சரித்திரக்காரர்களால் அந்த அம்மையே தகுதியானவளென்று எழுதப்பட்டதிற்குப் பொருந்த ஒருவருடத்திற்குள்ளாக அமைதியும் பாதுகாப்பும் தன்தேசத்திற்குண்டாக்கினள்.

மாளவ தேசத்து இராணியாகிய அகலியாபாய் தன்னுடைய ஜனங்களுக்கு சுவதந்தரம் கெடாமலும், பாக்கிய முண்டாகும் படியாயும், சந்தோஷகரமாகவும் இருபதாண்டு காலம் இராஜாங்கம் நடத்தி வந்தனள். இந்துக்களும் மகமதியர்களும் அவளுடைய இராஜாங்கமும் ஆயுளும் நீண்ட காலமிருக்கும்படிப் பிரார்த்தித்து வந்தார்கள். தன் பெயரைக் கொண்டாட சகியாதவளாகித் தன் சரித்திர மெழுதிய வொரு புத்தகத்தை அழித்ததுமன்றி, எழுதிய ஆசிரியனையும் கவனிக்கவில்லை.

அமெரிக்கா தேசமானது தன் நாகரிகத்தைப்பற்றியும், ஸ்திரீகளுக்குள்ள சுதந்தரங்களைப் பற்றியும் பெருமை பாராட்டுகிறது. ஆனால் அவர்களுக்கு எவ்வளவு சுதந்தரமிருக்கிறதென்பதை நாமறிவோம். இதற்குக் காரணம் ஸ்திரீகளைப் பற்றி பைபிளில் வியவகரிக்கப்பட்டிருக்கும் ஆதாரங்கள் மனதில் தீர்க்கமாகப் பதிந்திருப்பதுதான். ஸ்திரீகளுடைய பொது சங்கங்களையும், அவர்கள் சுதந்தரம் பெற முயலுவதையும் பற்றி சற்று நிதானியுங்கள். உரோம சட்டங்களும் உரோம நீதிகளும் கிறிஸ்தவ மார்க்கம் கொடுத்த சுதந்தரங்களைக் காட்டிலும் அதிகம் கொடுத்திருந்தன. கிறிஸ்தவர்கள் ஸ்திரீகளுக்கு மரியாதை செய்ய மகமதியர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். மகமதியர்களும் இந்துக்களிடமிருந்து ஸ்திரீகளும் புருஷர்களைப் போல சமத்துவத்துக்கு பாத்தியப் பட்டவர்களென்றும், ராஜனைப்போல் இராணியும் உரிமையுடையவளென்றும் நினைத்து வந்தார்கள். இக்காலத்தில் கூடக் கிறிஸ்தவ மார்க்க ஸ்திரீகள் அவ்வளவில்லை என்று நினைக்கிறார்கள். [ஐரோப்பிய இராஜாங்கங்களில் சில இடங்களில் Salic law பிரகாரம் ஸ்திரீகள் இராச்சியம் ஆள உரிமை இல்லை; இக்காரணத்தை முன்

விட்டு நம் மாட்சிமை தங்கிய விக்டோரியா மஹாராணியார் ஐரோப்பாவிலுள்ள ஹானோவர்(Hanover)என்னும் சிற்றரசை தன் சிற்றப்பனுக்குக் கொடுத்துத் தன் உரிமையை இழந்தாள்] கிறிஸ்தவ ராஜாங்கங்களின் சட்டங்களைக் காட்டிலும் இந்தியாவில் ஸ்திரிகளுக்கு சொத்தைக் காப்பாற்றுவதில் அதிக உரிமைகளுண்டு. குடும்ப சம்பந்தமான லௌகிக வைதிககாரியங்களில் கணவன் பத்தினியின் சம்மதத்தைப் பெறக் கடமைப் பட்டிருக்கிறான்.

இந்திய ஸ்திரீகள் அடிமைகளிலும் கேடாக நடத்தப்படுவதாக அடிக்கடி சொல்லப்படுகிறது; அத்தனையும் தவறு. ஆங்கிலேய மாதர்களையும் அமெரிக்க மாதர்களையும் ஆளும் ஆங்கிலேயனைக் காட்டிலும் உயர்வாக இந்திய ஸ்திரீகள் நடத்தப்படுகிறார்கள். ஸர் மோனியர் வில்லியம்ஸ் என்பவர் ஐரோப்பிய ஸ்திரீகளைக் காட்டிலும் இந்திய ஸ்திரீகளுக்கு அதிக செல்வாக்குண்டென்று சொல்லுகிறார். பத்தினியை அடிப்பவர்களின் தொகை ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களைக்காட்டிலும் இந்தியாவிற் குறைவு. ஸ்திரீகளின் சரீரத்தை தேவாலயம்போல பாவியாதவன் உண்மையான ஹிந்து அல்ல. மனு "ஸ்திரீகளின் தேகம் விசேஷமுடையதாகையால் மிருதுவான பூவினாற் கூடத் தட்டக்கூடா" தென்கிறார். அதினாற்றான் ஸ்திரீகளுக்குக்கொலை தண்டனை விதிக்கப்பட்டதில்லை. இப்படிச் சொல்வதைக் காட்டிலும் மநுமுதலாகிய ஸ்மிருதிக்காரர்களுடைய வசனங்களை சொல்லுவது உசிதமாம்.

1. ஸ்திரீகளின் வாய் எக்காலத்தும் பரிசுத்தமானது—V. 130.

2. தங்கள் க்ஷேமத்தை விரும்பிய தகப்பன், கணவன், தம்பி, தமயன், மைத்துனன்களும் ஸ்திரீகளை மரியாதையாக பாவிக்கவேண்டும்—III. 55.

3. எங்கே ஸ்திரீகள் கொண்டாடப்-படுகிறார்களோ அந்த விடத்தில் தேவதைகள் திருப்தியடைகிறார்கள். அவர்களுக்கு அவமானம் நேரிட்ட இடத்தில் என்ன கருமங்கள் செய்தபோதிலும்பிரயோஜனப்படுவதில்லை—III. 56.

4. ஸ்திரீகள் அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாக விருக்குமிடத்தில், அக் குடும்பம் நாசமடைகிறது; சந்தோஷகரமாக விருக்கும் குடும்பம் விருத்தி யடைகிறது—III. 57.

5. இதேமாதிரியாக மக்களில்லாத ஸ்திரீகளையும், வம்சநாஸ்தியான குடும்பங்களையும், பர்த்தாவிடத்தி லன்பு பூண்ட மாதர்களையும், ரோகமடைந்தவர்களையும் பார்க்க வேண்டும்—VIII. 28.

6. செக்சோலோச்சு மரசன் சந்ததியில்லாத ஸ்திரீகளின் சொத்தை அவர்கள் வாழுளிலே யபகரிக்கும் உறவினரை தண்டிக்கவேண்டும்—VIII. 29.

7. ஸ்திரீகளையும் பிராமணர்களையும் பாதுகாக்கும் பொழுது செய்த செய்கைகள் பாபமாகமாட்டா—VIII. 349.

ஆரோக்கியமும், அழகும்.

இயற்கை விதிகளை அனுசரிப்பவர்கள் சுகத்தை அடைந்து வாழ்வார்கள். அதை மீறுபவர்கள் தேகாரோக்கியத்தை இழந்து சாவார்கள். தேகமுயற்சியால் இரத்த ஓட்டம் அதிகப்பட்டு தசைக்கும் பலமும் அழகும் உண்டாகும். அழகும் ஆரோக்கியமும் ஒன்றைவிட்டு ஒன்று இணைபிரியாமலிருக்கின்றன. அழகை விருத்தி செய்வதெதுவோ அது பலத்தையும் உண்டாக்கும், பலத்தை உண்டாக்கத்தக்கது அழகையும் விருத்திசெய்யும். அழகு அழகை உண்டாக்குமாதலால், அழகில்லாத தாய் தந்தைகளுக்கு அழகுள்ள பிள்ளைகள் உண்டாவதில்லை.

அழகான முகமும் தேகமும், மனஉற்சாகத்தால் உண்டாகும். இப்போது நாம் பார்க்கிற அனேக அழகுள்ளவர்கள் மன உற்சாகமும் அழகுமுள்ள சாதியாரின் சந்ததியாரே.

வில்வளைவான புருவத்துக்கும் உளியால் செதுக்கினது போல் சுச்சிதமான மூக்குக்கும் இனிமையான வாய்க்கும் காரணமென்ன? இவை இன்னகாலத்தில் இன்ன காரணத்தால் உண்டாயினவென்று நமக்குத் தெரியாவிட்டாலும் இவையெல்லாம் இவர்கள் மூதாதைகளின்மனதிலிருந்தே உண்டாயிருக்கவேண்டும். குருபம்குருபத்தையும்ருபம்ருபத்தையும் உண்டாக்கும்.

மிகப் பெரிய தருமம்! மிக்க தனம் பெறச் சமயம்!!

நாடார் மஹாஜன சங்கம், ஏழை மாணவர்,

ஸ்காலர்ஷிப் லாட்டரி.

1926-ஜூன் மீ 30உ பிரைஸ் எடுக்கப்படும்.

சீட்டொன்றிற்கு ரூபாய் ஒன்று வீதம்

இரண்டு லக்ஷம் சீட்டுகள்.

22 சீட்டுகளடங்கிய புஸ்தகம்

கிரயம் ரூபாய் 20.

75,000 ரூபாய் 10,975 பிரைஸ்களாகக் கொடுக்கப்படும். 1-வது பிரைஸ் ரூ. 10,000

2-வது பிரைஸ்	ரூ.	5000
3-வது ,,	ரூ.	3000
4-வது பிரைஸ்	ரூ.	1000
5-வது ,,	ரூ.	1000

6-முதல் 15-வரை பிரைஸ்கள் ரூ. 500 வீதம்.

பதினாயிரத்திற் கதிகமான பிரைஸ்கள் கொடுப்பதால் 20 புள்ளிகளில் ஒருவருக்குப் பிரைஸ் கிடைப்பது திண்ணம்.

மற்ற விபரங்களை நாடார் மஹாஜன சங்கம் காரியதரிசிகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

வெ. பாலகுருசாமி நாடார்,
பிரஸிடெண்டு.

ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார்,
வைஸ் பிரஸிடெண்டு.

ஆபீஸ்:—
221, கீழமாரட்டு வீதி,
மதுரை.

குறிப்பு:—மேற்சண்ட தேதிக்குள் இரண்டு லக்ஷம் சீட்டுகள் விற்பனையாகாத பக்ஷத்தில், பிரைஸ் தேதி ஒத்திவைக்கப்படும், அல்லது பிரைஸ்கள் குறைக்கப்படும்.

சீட்டு வாங்குவோர் அறியவேண்டிய விஷயங்கள்.

1. சீட்டுகளுக்கு பணம் செல்லானாலன்றி அடிக்கட்டைகள் பிரைஸ் எடுப்பதற்குச் சேர்த்துக்கொள்ளமாட்டா. பணம் ஆபீஸ் வந்து சேர்ந்த விபரத்தையறிய விரும்புவோர் விலாசம் எழுதப்பட்ட ரிப்ளைகார்டு போட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்.

2. சீட்டுக்கொட்டி முடிந்ததும் பிரைஸ் விழுந்தவர்களுக்கும், இரண்டு சீட்டு புஸ்தகங்களுக்குக் குறையாமல் வாங்கினவர்களுக்கும், கூடிய சீக்கிரம் பிரைஸ் ஜாப்தா தபாலில் இலவசமாக அனுப்பப்படும். மற்ற சீட்டு புள்ளிகள் ஸ்டாம்பு ஒட்டி விலாசமெழுதிய கவர் அனுப்பி பிரைஸ் ஜாப்தா பெற்றுக்கொள்ளலாம்.

3. பிரைஸ் விழுந்த புள்ளிகள் சீட்டுக் கொட்டிய 90-நாட்களுக்குள் பிரைஸ் விழுந்த சீட்டை யனுப்பி பிரைஸ் தொகையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

4. மணியாடர்களும், சகலவிதமான கடிதப் போக்குகளும் "காரியதரிசிகள், நாடார் மஹாஜன சங்கம், 221, கீழமாரட்டு வீதி, மதுரை" என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். மணியாடர் கூப்பனில் தொகை யனுப்புவோரின் பூர்த்தியான விலாசத்தையும், அனுப்பப்படுந் தொகை இன்னின்ன நெம்பர் சீட்டுகளின் கிரயமென்பதையும் குறிப்பிட வேண்டும்.

5. ஒன்று முதல் 15-வரை பிரைஸ்களின் விபரம் முன் பக்கத்தில் காண்பிக்கப் பட்டிருக்கிறது. மற்ற பிரைஸ்களாவன:—

16-முதல் 35-வரை பிரைஸ்கள்,

		ஒன்றுக்கு		,,	ரூ.	200
36	,,	65	,,	,,	ரூ.	100
66	,,	125	,,	,,	ரூ.	50
126	,,	375	,,	,,	ரூ.	20
376	,,	875	,,	,,	ரூ.	10
876	,,	4475	,,	,,	ரூ.	5
4476	,,	10975	,,	,,	ரூ.	2

பர்மாவைப்பற்றிய இரகசியங்களும் அதிசயங்களும்.

மிஸ்டர் V. சுப்பிரமணியம், பி, ஏ.

தலயிங்கு அல்லது ராமண்ய தேசம்.

(1) தாட்டோன் அல்லது சுவர்ணபுரி.

தலயிங்கர் தங்களுடைய சொந்த சரித்திரத்தில் தங்கள் உற்பத்தி, பூர்விகத்தைப் பற்றி ஒன்றுமே தெரிவிக்கவில்லை. அவர்களுடைய புராணமும் பொய்யும் மெய்யும் கலந்து எழுதப்பட்டிருக்கின்றதே யன்றி நடந்தது நடந்தபடி எழுதப்பட்டிருக்கவில்லை. அவர்களுடைய சரித்திரமும் கௌதமர் காலம். அதாவது கி. மு. 600-ஆம் வருடமுதல்தான் ஆரம்பிக்கிறது. வேறு தேசத்திலிருந்து குடியேறி வந்ததாகவாவது அவர்கள் தற்காலத்தில் பரவியிருக்கும் நாட்டை விட்டு வேறெந்த நாடாவது சென்றிருந்ததாகவாவது ஏற்படவில்லை. ஆனால், சரித்திரக்காரர்களுக்குத் தெரிந்த வரையில் பர்மாவில் குடியேறியிருந்த பூர்விகர்கள் தலயிங்கு அல்லது மோன் ஜாதியார் எனப்படுவார். இவர்களுக்கு முன்னிருந்தவர்கள் இன்னாரென்று ஏற்படாததினால் இந்த மோன் ஜாதியாரே பர்மாவுக்குப் பூர்விகரென்று சரித்திரக்காரர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தெலுங்கான ராஜ்யத்துக்கும் வங்காள விரிகுடாவுக்குக் கிழக்கேயுள்ள தேசங்களுக்கும் ஆதிகாலந்தொட்டு வர்த்தகம் நடந்து வந்தது யாவரு மறிந்தவிஷயம். இவ்வுண்மையை மறுப்பவர் எவருமிலர். இதை ரூபிக்க வேண்டிய ருசுக்கள் ஏதேஷ்டமாயுள. தலயிங்கர் புராணத்திலிருந்து மாத்திரம் இதற்கு அத்தாட்சி தேடவேண்டியதில்லை. சிங்களத்தீவிலுள்ள சாஸ்திரங்களில் ஸ்வர்ண பூமியிலிருந்து வர்த்தகர்கள் மத்திய இந்தியாவில் வியாபாரஞ் செய்து வந்ததாக எழுதி யிருக்கிறது. தெலுங்க அல்லது கலிங்க மென்னும் பெயர் தலயிங்க ராஜ்யத்தில் எவ்வளவு நன்றாக தெரிந்திருந்ததோ அவ்வளவு நன்றாக சுமத்ரா ஜாவா த்தீவுகளிலும் தெரிந்திருந்தது.

கிறிஸ்து பிறப்பதற்கு வெகு நூற்றாண்டுகளுக்கு முன் திராவிட ஜாதியைச் சேர்ந்த ஜனங்கள் தென்னிந்தியாவின் ஒருபாகமாகிய தெலுங்க அல்லது தெலுங்கான் தேசத்திலிருந்து ஸ்வர்ண பூமியென்றும், ராமண்யமென்றும் சொல்லப்பட்ட ஐராவதி, சிட்டாங், சால்வின் நதிகளின் முகத்துவாரங்களைச் சுற்றியிருந்த பிரதேசங்களில் வியாபாரஞ் செய்யும் பொருட்டு இப்பொழுது தாட்டோன் என்று சொல்லப்படும் சுவர்ண பூமியில் வந்து இறங்கினார்கள். அங்கு நாகரீக மற்ற முரட்டு ஜாதியார் வசித்துக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்களோடு விவாகாதிகள் செய்துகொண்டு சமாதானமாகி அவர்களுக்கிடையே வசித்து வந்தார்கள். இந்தக் காட்டு ஜனங்கள் மோன் ஜாதியாராக விருக்க வேண்டும். தெலுங்கு தேசத்திலிருந்து வந்தவர்களாதலால் தலயிங்கரென்றும், மோன் ஜாதியாரோடு கலந்து விட்டவர்களாதலால் மோனரென்றும் புதிதாய் வந்தவர்க ளழைக்கப்பட்டார்கள். இவர்கள் தங்களுடைய நாகரிகத்தைக் காட்டு ஜனங்களிடம் பரவச்செய்ததுமன்றி தாட்டோனை மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்த ஒருபெரிய நகரமாகவும் செய்து விட்டார்கள். இப்படி தாட்டோனைப் பெரு நகராக்கியவர்க்கு சிம்மராஜரென்று பெயர். அவர் கௌதம புத்தர் காலத்திலிருந்தவர். அவரைப் பற்றிப் பின்வருங் கதையைச் சொல்லுகிறார்கள். கர்னுடக தேசத்தில் தூபியன்ன நகரத்தரசனின் குமாரர்களான தீர்த்தன் ஜபகுணமான் இருவர்களும் துறவிகளாகி தாட்டோன் மார்ட்டபான் இவ்விரண்டுக்கு மிடையேயுள்ள சஞ்சீவிக மலையில் வசித்து வந்தார்கள். கொஞ்சகாலம் கழித்து இளையவன் சுவேகாவின் மலைக்குச் சென்று அங்கு தவம்புரிந்து வந்தான். மூத்தவன் சஞ்சீவிக மலையினடிவாரத்திலுள்ள கடற்கரையிலுலாவி வரும்போது இரண்டு முட்டைகளைக் கண்டெடுத்தான். கொஞ்ச நாளில் அம்முட்டைகளினின்றும் இரண்டு ஆண் குழந்தைகள் கிளம்பினார்கள். ஒரு பையனைத் தீர்த்

தன் தனது தம்பியிடம் கொடுத்தான். ஆனால் அந்தப்பையன் 10-வயதில் பெரியம்மை போட்டு இறந்துவிட்டான். மற்றப் பையனுக்கு வயது 17-ஆனதும் தனது வளர்ப்புத் தந்தையின் போதனையால் சுற்றியிருந்த மோன் அல்லது தலையிங்கர் யூணர் பிராமணர்கள் ஷாணர்கள் சினர் லாவர் தலங்கத்தர் சாபாசாவர் முதலியவர்களை வகோபித்துக் கூட்டித் தாட்டூன் நகரத்தை யுண்டாக்கினான். அந்தப்பையன் சிம்மராஜனென்று நாமம் சூட்டிக்கொண்டான். இறந்துபோன அவன் தம்பி மிக்டிலா தேசத்தில் பிறந்து 7-வயதா யிருக்கும்போது கௌதமரைக் கண்டு உபதேசம் பெற்று ரகந்தகவோள் படே என்பவரானான்.

மேற்படி கதையில் சொல்லிய கர்னாடகம், தூபியன்னம் முதலியன தென்னிந்தியாவிலிருப்பதாகச் சரித்திரக்காரர்களால் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறது. இப்பொழுது தாட்டூன் கடற்கரை 8-மைல் தூரத்துக்கப்பாலிருக்கிறது. ஆனால், அந்த காலத்தில் ஒரு பெரிய துறைமுகப் பட்டினமாயிருந்தது. இடையில் கடல்பின் சென்று நீர் வற்றியிருப்பதால் நீர் இருந்த விடமெல்லாம் இப்பொழுது சமதரையாகி யிருக்கிறது. சஞ்சீவிகபர்வதமும் கடலோரத்தி லிருந்திருக்கவேண்டும். அப்படியே தைக்குலம் என்னும் ஊர் கடலுக்கு 12-மைல் தூரத்துக்கப்பால் உள்காட்டி லிருந்தபோதினும், 16, 17 வது நூற்றாண்டுகளில் ஒரு முக்கியமான கடற்றுறையாக விருந்ததாகத் தெரிகிறது. இப்பொழுதும் அவ்வூரின் சுற்றுப்பிறங்களில் பாய்க் கயிறுகளும், கம்பிகளும், பாய்க் கப்பல்களுக்கு வேண்டிய சாதனங்களும் பூமியினின்றும் அடிக்கடி வெட்டி யெடுக்கப்படுகின்றனவாம்.

இப்போது தாட்டூன் பாகட்டு [Pagat] முதலிய இடங்களிலுள்ள இந்து சிலர் வேலைகள் பர்மாவின் தென் கீழ்ப்பிரதேசங்கள் இந்துக்களால் குடியேறப் பட்டிருந்தன வென்பதற்குப் போதிய அத்தாட்சியாகும். சூலத்தோடு கூடிய பரமசிவனுருவும், ஒற்றைக் குதிரைகளாலிழுக்கப்பட்ட வண்டிகளும், கூந்தலைப் பின்முடி போட்ட ஸ்திரீகளும் மிக்க விசித்திரமாக சிலைகளில் வெட்டப்பட்டிருக்கின்றன. வைஷ்ணவ சின்னங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன, வைஷ்ணவ சின்னங்கள் செதுக்கப்பட்டிருக்கும் மூன்று சிலைகள் தாட்டூன் அசிஸ்டண்டு கமிஷனர் ஆபீசு தோட்டத்தில் கிடந்தன. அவற்றை எடுத்து வந்து இப்பொழுது ரங்கூன் பேர்காட்சி [Phayre Museum] சாலையில் வைத்திருக்கிறார்கள். சேஷசாயின நாபிக் கமலத்திலிருந்து நான் முகனும், சங்கு சக்கரதாரனும் உருத்திரனும் உற்பத்தியானது போற் காட்டும், சிலா வேலைகள் சிலவுள. கௌமோதகியுடன் கூடிய லட்சமிபதியின் பதுமையும் செதுக்கப்பட்டிருக்கிறது.

[கோமளரூபங்கள் நான்கு வகைகளாகப் பெருக்கோவிலில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆயுதபாணிகளாகப் பயணம் செய்யும் உருவங்களும், போர்புரியும் உருவங்களும், தோல்வியுற்றுப் பின் புறங்காட்டியோடு முருவங்களும் வணங்கி உயிர்ப்பிச்சை கேட்கும் உருவங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. ராமாயணத்திலிருந்து சில கட்டங்கள் பதுமைகளில் செய்து விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. இதில் அநுமான் முதலியவானர சைனியமும், ராவணனுடைய அரக்கர் சைனியமும் செதுக்கப்பட்டிருக்கின்றன.]

1891-வது வருஷ ஸென்ஸஸ் ரிப்போர்ட்டில் தலயிங்கரைப்பற்றி மிஸ்டர் ஈல்ஸ [Eales] என்பவர் அடியில் வருமாறு சொல்லியிருக்கிறார்.

“தலயிங்கம் தெலுங்காணம் என்னும் பதங்கள் ஒன்றே என்று இதுவரையில் எண்ணப்பட்டிருந்தது. சத்தம் ஒன்றாயிருப்பதைக் கொண்டும் இந்தியாவில் கோல்ஸ் [Koles] ஜாதியாரால் பேசப்பட்ட கொலேரியின் பாஷையை அநுசரித்து தலயிங்கருடைய பதோற்பத்தி உண்டானதென்பதைக் கொண்டும் இந்த அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருந்தது. காப்டன் பேராப்ஸும் [Capt Frorbes] டாக்டர் போர்ச்சமரும் (Dr. Forchhommer). இக்கொள்கையை ஒருவாறாக நிவர்த்தித்து விட்டார்கள். இம்மறுதலிப்புக்குக் காரணம் தலயிங்க என்னும் நாமம் தலயிங்கரால்ஒரு சமயத்திலும் உபயோகப்படுத்தப்படவில்லையென்பதே. தலயிங்கர் தங்களை எப்பொழுதும் மோனரென்று சொல்லிக்கொண்டார்கள். இவர்களை ஜயித்த பர்மர் நிந்தையாக இவர்களைத் தலயிங்கரென்றழைத்தார்கள்.

ஆனால் புரொபஸர் கீன் (Professor Keane) தனது “சென்ற மனிதனும் தற்கால மனிதனும்” (Man past & present) என்னும் புத்தகத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—

“சரித்திர காலத்தில் ஹிந்து மதஸ்தர்களான திராவிடர்கள் (முக்கியமாய் தெலுங்கர்கள்) தென்னிந்தியாவின் கீழ்க்கடற்கரை யோரத்தினின்றும் இந்து

சைனுவுக்கு (Pegu) அடிக்கடி குடியேறியிருக்கிறார்கள். மோன் ஜாதியாரோடு ஒன்றாகக் கலந்து போன தலயிங்கர் என்னும் நாமத்தில் இவ்விஷயம் இன்னும் விளங்குகிறது. அந்த மோன் ஜாதியாரும் பர்மர்களோடு இப்பொழுது ஒன்றாகக்கலந்து வருகிறார்கள். அதே (தெலுங்க) சம்மந்த முடையவர்கள் மலாசியா தேசத்தில் (முக்கியமாக மலாக்காவில்) இங்ஙனம் குடியேறி யிருக்கிறார்கள். இவர்களுக்கு இங்கே கிளிங்கர் (தெலுங்கர்) என்று பெயர்"

1901-வது வருஷத்து ஸென்ஸஸ் ரிப்போர்ட்டில் மிஸ்டர் லிவிஸ் (Mr. Lowis) என்பவர் பின் வருமாறு எழுதுகின்றார்:—

"மோனர்கள் தங்களைத் தலயிங்கர் என்று சொல்லிக் கொள்ளாததினால் (நமது விஷயத்துக்கு) ஒரு பாதகமுமில்லை. அதினின்றும் தலயிங்கர் தெலுங்கரல்லவென்று ரூபிப்பதற்கில்லை. திராவிட ஜாதியில் தோன்றிய இவர்கள் தமது கருநிறம் படைத்த முன்னோர்களைப்பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்ள இடமுண்டோ? ஆதலால் புதிய நாட்டிற் குடியேறியதும் தமது பூர்வோத்திரத்தை மறக்கவும் வேண்டிய வழியைப்பார்த்திருக்கவேண்டும். ஆனால் அவர்களுடைய விரோதிகளான பர்மர்கள் அவர்களுடைய குலத்தை யெடுத்துக் காட்டிக்கொண்டே யிருந்திருக்க வேண்டும். தலயிங்கமென்பது ஏளன வார்த்தையாகவே யிருக்கலாம். அதைக்கொண்டு அப்பதத்தின் சரித்திரப்பொருளை மறுக்கவிடமில்லை. அவ்வார்த்தை தெலுங்கு என்னும் பதத்தின் மரூஉவே யென்று ரூபிப்பதற்கு வேண்டிய அத்தாட்சிகள் கிடைக்கும். மிஸ்டர் கல்ஸ் கிளிங்கு (Kling) என்பது "கோரங்கி" என்னும் பதத்தைச் சைனுக்காரால் மாற்றப்பட்ட ஒரு மரூஉ என்கிறார். அவர் சொல்வது உண்மையே!!

வெகு நாள்வரைக்கும் இந்தத் தலயிங்கர் இந்துக்களாகவே யிருந்தார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன் மூன்றாவது நூற்றாண்டில் பௌத்தர்கள் தாட்டோன் வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்த பிராமணர்கள் வந்த யதிகளை நாஸ்திகர்களென்றெண்ணி வெறுத்து எதிர்க்கத் தலைப்பட்டார்கள். ஆயினும் பௌத்த மதம் கொஞ்சம் கொஞ்சமாக அந்த நிலைபெற்றது. நாளடைவில் தலயிங்கரெல்லாம் பௌத்தரானார்கள்.

ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (கி. பி. 603. இல்) புத்த கோஷரால் பௌத்த சாஸ்திரங்களாகிய திரிபீடகங்கள் தாட்டோனுக்குக் கொண்டுவரப்பட்டன. அவர் பௌத்தமத்தைப் பரவச் செய்யும் பொருட்டு தேச சஞ்சாரம் செய்து கொண்டு சிங்களம் Ceylon வந்து அச்சமயம் அங்கு சீனாவிலிருந்து வந்திருந்த பௌத்த சன்னியாசியாகிய Fa—Hian என்பவரோடு சிங்களத்திலுள்ள பௌத்த சாஸ்திரங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்து விட்டு தாட்டோன் வந்து சேர்ந்தார். புத்த கோஷர் தாட்டோனிலேயே பிறந்து வளர்ந்தவரென்று தலயிங்கர் சொல்வது அபத்தம். அவர் இந்தியாவில் பிறந்த வளர்ந்தவரென்று மாஹாவம்சம் என்னும் கிரந்தத்தில் சொல்லியிருக்கிறது. அவர் தாட்டோனுக்கு வந்த சமயத்தில்தான் தலயிங்கு பாஷைக்கு எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒருவேளை புத்த கோஷரே அவ்வெழுத்துக்களை உண்டாக்கி யிருக்கலாம். 3-வது நூற்றாண்டில் இந்தியாவிலிருந்த ஒரு பாஷையின் எழுத்துக்களை அனுசரித்து தலயிங்கு அட்சரங்கள் ஏற்படுத்தி யிருக்கவேண்டும். புத்தகோஷர் வந்து போனதும் தலயிங்க நாட்டில் பௌத்தமதம் வளர்ச்சிதப்பட்டது. கோவில்களும் மடங்களும் போட்டி போட்டுக் கொண்டு கட்டப்பட்டன. தாட்டோனைச் சுற்றிய பிரதேசங்களெங்கும் பௌத்த மதமே பலத்தது. (இன்னும் வரும்.)

அயோக்கியச் செய்கை.

சடந்த மீ 24-4-25 தேயில் கொழும்பிலிருந்து எனது நண்பர். ஞா. பா. ஞானையா நாடாரென்று கைசாத்தி எனக்கு பலவாராக வீண் மொழி பசப்பி எழுதிய லிகிதம் ஒன்று கிடைத்துளது. அக்கடிதம் ஞா. பா. ஞானையா நாடாரென்ற பெரியார் பெயரைத் தரித்து எமை எவிற்றிய அநாம தேயக் கடித மென்பதை எமது நண்பர் கடிதமூலமாய் அறியலானேன். இத்தகைய பேர்வழியின் துஷ்கிருத்தியச் செயலை நாம் சில சந்தேகங்களாலும், எழுத்தின் தன்மையாலும் இன்னாரென ஓர் சிறிது அறிவோம். இக் கடிதம் எழுதியவர் ஆகஸ்டுமீ 15 தேதிக்குள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளாத விஷயத்தில் பிராது தொடரப்படும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

க. போ. சோமசுந்தர நாடார்
கச்சினாவிளை
Nazareth. P. O.

இனி எந்தவிதமாய் நாம் மேன்மை யடையலாம்?

அன்பர்களே! ஒரு ஜன சமூகமாவது, (அதாவது) ஒரு ஜாதியாராவது, ஒரு குடும்பத்தாராவது, ஒரு தனிமனிதனாவது செல்வநிலையிலாகட்டும், கல்விநிலையிலாகட்டும் விருத்தியை யடைவதோ, அல்லது தாழ்வை யடைவதோ தங்கள் தங்களுடைய சொந்த முயற்சியைப் பொறுத்திருக்கிறதே அல்லாமல், அவரவர்கள் அவரவருடைய நல்லவேளை, கெட்டவேளை என்னும் விதியினால் அல்லவென்பது உங்கள் ஒவ்வொருவருடைய மனதிலும் பசுமரத்தாணிபோல் பதியவேண்டும். ஒருவன் மிகுந்த செல்வவானாவதைப்பார்த்து அது அவனுடைய நல்லவேளை என்றும், ஒரு செல்வவான் ஏழையாவதைப் பார்த்து அது அவனுடைய கெட்டவேளை யென்றும் சொல்லிக்கொண்டு நமக்கும் நல்லவேளை இருந்தால் சொத்து சேருகிறது, கெட்டவேளை இருந்தால் நஷ்டமடைகிறோம், வருவதுவந்துதானேதீரும் நமது பிரயத்தனத்தால் என்னவாகும் என்று எண்ணி மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருக்கிற வரையில் நாம் முன்னுக்கு வரவே போகிறதில்லை. ஆகையால் இந்த நல்லவேளை, கெட்டவேளை என்னும் நம்பிக்கையை அடியோடு விட்டு விட்டு, திடச்சித்தமும் ஊக்கமுமுள்ளவர்களாய்ப் பல்வித நல்வழிகளாலும் தங்கள் வரும்படிகளை அதிகப்படுத்திக் கொள்ளும் மார்க்கத்தைத் தேடுவதும், அவரவருடைய வரும்படிக்கும் அந்தஸ்துக்கும் தக்கபடி நிதானமாகச் செலவுசெய்வதும், கடன் வாங்கும் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாகவும், அதாவது எந்தக்காரியத்தை கடன் வாங்கியாவது செய்யாவிட்டால் நாம் ஜீவிக்க முடியாதோ, அந்தக் காரியத்துக்காகவல்லாமல், நகைகள் செய்வது, வீடுகள் கட்டுவது, பெண்மக்களுக்கு ஸ்ரீதனம் கொடுப்பது முதலிய காரியத்துக்காக கடன் வாங்காமலும், வாங்கின கடனைத் தீர்க்கும் விஷயத்தில் மிகுந்த கவலையுள்ளவர்களாகவு மிருக்கவேண்டும். நமது ஜாதியாரில் இப்போது பல இடங்களில் அதிக வட்டிக்குக் கடன்வாங்கி வருத்தமடைகிறவர்களைக் கூடுமானவரையில் கைதூக்கி விடும்படியான மார்க்கமும் ஒன்றுண்டு. அந்த மார்க்கமானது நமது ஜாதிப்பணக்காரர்கள் மனது வைத்தால்தான் நிறைவேறக்கூடும். அது என்னவென்றால், ஐக்கிய நாணயச் சங்கங்களைக் குறித்த ஆக்டு என்று ஒரு சட்ட முண்டாக்கி யிருக்கிறார்கள். அதன்படி ஒவ்வொரு கிராமத்தாரும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதை ரிஜிஸ்தர் செய்வித்துக் கொள்ளலாம். அது நம் ஜாதியாரின் சங்கமாக ஏற்படும் பக்ஷத்தில் நம் ஜாதியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அதில் மெம்பர்களாகச் சேரலாம் அதில் ஒவ்வொருவரும் தங்களுக் கிஷ்டமான தொகையைக் குறைந்த வட்டிக்குச் கட்டிவைக்க வேண்டும். இப்படியாகச் சேர்ந்த அந்தச் சங்கத்தின் மூலமாயிருந்து அந்த ஜாதியாருக்குத் தொகைகள் கடனாகக் கொடுக்கலாம். ஆனால் அந்தச் சங்கத்தில் யார் கடன்வாங்கவேண்டுமோ அவர்களும் அதில் மெம்பர்களாகச் சேர்ந்து தாங்களும் அதில் ஒரு ரூபாயாவது கட்டி வைத்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாமலிருப்பவர்கள் அதில் கடன்வாங்க முடியாது. தொகை கட்டியிருப்பவர்களெல்லாரும் சேர்ந்து அந்தச் சங்கத்தை நடத்துவதற்குத் தங்களுக் கிஷ்டமானவர்களை உத்தியோகஸ்தர்களாக நியமிக்கலாம். முதல் போட்டிருப்பவர்கள் வருஷா வருஷம் அந்தச் சங்கத்திலிருந்து வட்டி எடுத்துக்கொள்ளலாம். அந்தச் சங்கத்தில் கடன் வாங்குகிறவர்கள் எவ்வளவு தொகையானாலும் தாங்கள் எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜை ஸ்டாம்பு காகிதத்தில் எழுதவேண்டியதில்லை. ரிஜிஸ்தருக்குச் கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை. அப்படி இல்லாவிட்டாலும் அந்தத் தஸ்தாவேஜுகளானவை மற்ற தஸ்தாவேஜுகளைப் போலவே கோர்ட்டு

களில் செல்லும். அந்தச் சங்கத்தின் வரும்படியின்மேல் சர்க்காருக்கு வருமான வரிசெலுத்த வேண்டியதில்லை. அந்தச் சங்கத்தில் ஒருவர் தொகை கட்டியிருந்தால் அவர் வேறு கடன்பட்டிருந்தாரானால் அந்தக் கடனுக்காக சங்கத்தில் கட்டியிருக்கிற அவருடைய முதலானது ஜப்தி செய்யப்படமாட்டாது. அந்தச் சங்கத்துக்கு ராஜாங்கத்தாரும் மிகவும் குறைந்த வட்டிக்கோ, வட்டியில்லாமலோ அந்தச் சங்கத்தின் ஒட்டு முதலுக்கு அதிகப்படாத ஒரு தொகையைக் கடனாகக்கொடுப்பார்கள். அந்தச் சங்கத்தார் கொடுத்த கடனை வசூல் செய்வதற்கு சில விசேஷித்த பாத்தியதைகளுமுண்டு. இன்னும் அந்தச் சங்கத்துக்கு ராஜாங்கத்தாரால் வேண்டிய உதவிகளும் செய்யப்படும். இப்படிப்பட்ட ஒரு சங்கத்தை நமது ஜாதியில் ஏற்படுத்தி நமது ஜாதிப் பணக்காரர்கள் ஏராளமான தொகையை வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 6வீதத்துக்கு அதில் வட்டிக்குப்போட்டு, அதை நமது ஜாதியாருக்கு 100-க்கு 10 வீதத்துக்கு அதிகப்படாத ஒரு வீதத்துக்குக் கடனாகக் கொடுத்து, அதை சுலபமான மார்க்கங்களால் சிறுகசிறுக வசூல் செய்து அந்த விதத்தில் நமது ஜாதியாருக்கு உதவி செய்வதுதான் நான் சொன்ன மார்க்கம்.

இதோடு, நமது ஜாதிப் பணக்காரர்கள் நமது இந்துமத சாஸ்திர, புராணாதிகளை வாசித்தும், உலக விவகாரங்களையும் சன்மார்க்கத்தையும் போதிக்கக் கூடிய பத்திரிகைகளை வாசித்தும், தற்காலத்துக் கல்விமான்களால் எழுதப்பட்ட புஸ்தகங்களை வாசித்தும் தங்கள் அறிவை விருத்தி செய்து கொள்வார்களானால், அவர்களும் கூடுமான வரையில் பொதுஜன க்ஷேமத்தை நாடும்படியான சக்தியுடையவர்களாவார்கள். இப்போது நம்மில் சிறியவர்களாகட்டும், பெரியவர்களாகட்டும்,—சாதாரணமாக வாசிக்கத் தெரிந்தவர்கள் இந்த வழியில் பிரவேசிக்கலாம். நீங்கள் உங்கள் குமாரர்களை சாத்தியமான வரையில் படிப்பிக்கத்தவறிப் போகாதீர்கள். நாம் நமது மத சம்பிரதாயப்படி தெய்வ பக்தியும், ராஜவிசுவாசமு முள்ளவர்களாயிருக்க வேண்டுமல்லவா? தெய்வ பக்தியை விருத்தி செய்ய வேண்டும். கடவுளுடைய கிருபையும், ராஜாங்கத்தாரால் கிடைக்கக்கூடிய அனுகூலங்களையும் துணையாகக்கொண்டு, நமது சொந்த முயற்சிகளாலேயே நம்மை நாம் விருத்தி செய்துகொள்ளவேண்டும். மேற் சொல்லியவைகள் தாம் நாம் விருத்தியடைவதற்கேற்ற உபாயங்களாக எனக்குத் தோன்றுகிறது.

வாலிப நாடார் வாசகசாலை, கும்பகோணம்.

இவ்வாசக சாலையானது ஸ்ரீ நாகேஸ்வரஸ்வாமி கோவில் வடக்கு வீதியிலுள்ள நாடார் மகாஜன சபைக் கட்டடத்தின் மேல்மாடியில் சென்ற ஏப்ரல்௴ 22௳ தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களால் திறக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தற்காலம் இவ்வாசக சாலைக்கு வந்துகொண்டிருக்கும் பத்திரிகைகளாவன:—

ஹிந்து	தமிழ்நாடு
ஜஸ்டிஸ்	நவசக்தி
டேடில்	குடியரசு
சுதேசமித்திரன்.	ஆனத்தபோனி
திராவிடன்	யதார்த்தவசனி
சுயராஜ்யா	தெய்வபக்தன்
இ. சுயராஜ்யா	பாரதமித்திரன்
நாடார்குலமித்திரன்	க்ஷத்திரியமித்திரன்

பிரதி தினமும் காலை 7-மணிமுதல் 9-மணி வரையிலும் மாலை 5 மணிமுதல் 8-மணி வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

வாசக சாலையில் பத்திரிகை பார்க்க கருதும் அபிமானிகள் மாதம் 1-க்கு அணா 4 சந்தா கொடுத்து அங்கத்தினராகச் சேர்ந்து வாசக சாலையை ஆதரிக்க வேண்டுகின்றனம்.

இப்படிக்கு,

J. கோவிந்தசாமி நாடார், செக்ரட்டரி.

A CHRONICLE OF THE ACTS OF THE SETHUPATHIS, THE RULERS OF THE RAMNAD CAPITAL.

(TRANSLATED FROM A TELUGU MS. IN THE MACKENZIE COLLECTION.)

In the early times, when the Chakravertis flourished, seven persons from among the inhabitants f this Ramnad peninsular coast were appointed, in order to be its guardians. When thus, through a long and remote traditionary period, thay had continued for many generations to guard it, one among the seven persons, the son of Shethunga-deven, Who was named Sadaica-devaiyer-Udiyan-Sethupathi, in the year of Salivahana-Sagartum 1527 and of the Christian year 1606, went to Maha-raja Sri Tirumali Naicker, one of the Carnataca lords, who was king of the Madura country; and being the chief of the seven, he received authority to rule this Ramnad kingdom, together with all connected honors. and then returned. At the same time the other six persons, who were also guardians were included in his govenrment; and, together with all the inhabitants, yielded their consent. He ruled for seventeen years, and then died. This ruler who was otherwise named Udaiyan-palli, had one wife and four children. Among these four children, the eldest, named Kutten-Sethupathi, was crowned S. S. 1544, Christian era 1623, and ruled fourteen years. He died childless. His younger brother, Dalavayi-Sethupathi, was crowned in S. S. 1558, Christian era 1637; and after some time had elapsed, his younger brother, named Bettana-Naicker. opposed him; and going to the Madura king, Tirumali-Naicker, he received authority thence to conduct the government in his own name; and bringing an army along with him, he put his elder brother, Dalavayi-Sethupathi, in prison, and sent him with all speed to Madura: after which he ruled with sole authority for three years Subsequently Maharaja, Tirumali-Naicker, was pleased to extend his gracious favor to Dalavayi-Sethupathi, and crowned him again in S. S. 1561, Christian era 1640. He thus ruled for nine years, and then died. His younger brother, Bettana-Naicker performed his funereal rites; and, as the deceased left no children, the three sons of his sister, named respectively Danukodi-dever, Ragu-natha-dever, and Athi-narayana-dever, went to the ruling sovereign of the Madura kingdom and were crowned in S. S. 1570, A. D. 1649; after which they returned, and having divided the kingdom into three portions, they ruled conjointly for the space of ten years. The eldest and the youngest having died, the middle one of the three, Raganatha-dever, united the other portions with his own, and reigned over the whole during twenty-six years. After him there remained his two children, named Raja-Surya-deven and Athina-deven. The eldest Raja-Surya-deven. was crowned in S. S. 1606, A.D. 1685, and died after having reigned six months. His younger brother, Athina-deven, having been crowned, ruled for three months and died. As they both died without children, and as their sisters had no children, and as there was no suitable person to succeed to the kingdom, the relations of that Marava tribe, with the inhabitants of the country and the official persons of the capital, all assembled, and crowned Ragu-nathu-dever, the so-called Kilaven-Setupathi, in S. S. 1607, A. D. 1686. He ruled for thirty-seven years, and died. The mother of his son, Bavanisangar-deven, was not born of a good caste, and by consequence Bavanisangar-deven who was born of her, did not inherit the kingdom, in consequence they crowned Vijiyacu-natha-Sethupathi, the son of the sister of the before-mentioned Ragu-natha-dever, who was called Kilaven-Sethupathi, which circumstance occurred in S. S. 1644, A. D. 1723. He ruled for fifteen years,

and died without offspring. They crowned Tagapen-deven, the son of the former's elder sister. After he had ruled four months, as there was a fault in his mother's pedigree, there was a dispute among his relatives, it being asserted that he had no claim to the crown, and was not suitable for the government. At the same time the before-mentioned Bavanisangar-dever, who had gone to Tanjore and obtained that king's favor, returned with a great number of people, and put Tagapen-dever in to prison: after which he himself ruled the kingdom for five years, On making war against the Palliyacaren of Sivagangai, who, from having four fortresses, was usually styled Nalu-Kottei-Udeigat-deven, this chief fled and refuge at Tanjore. Before that Katta-deven, the servant of Tagapen-deven, who had been chased away by Baranisangar-deven, was in attendance at Tanjore, The Sivagangai palliya-caren, named Nalu-Kottei udeiyat-deven, made one cause with him; and after an interview with the king, acquired his plenary favor, and by his aid they assembled troops, and drove away Bavanisangar-deven. In S. S. 1650, A. D. 1729, thy installed Katta deven, who was also called Mutthu-Ragu-natha-Sethupathi in the possession of the government. As nalu-Kottei-udeiyat-dever, the Sivagangai palliyacaren, had labored much all this business, and had rendered effectual aid Katta-dever reposed confidence in him, and dividing his Ramnad country into five portions, he set apart and gave to him a grant of two of these, so long as the moon and sun endure, freely to enjoy. The other three portions Katta-dever, also called Mutthu Ragu-natha-Sethupathi, ruled over for six years, anb then died.

In S. S. 1669, A. D. 1748, they crowned Rakana-dever, the grandson of the preceding chiefs elder sister; but as the consent of the people was not given, they set him aside, and in S. S. 1670, A. D. 1749 Sella-dever, also called Vijiyacu-natha-Sethupathi, conducted thegovernment for three years, and died. He had no son suitable to inherit the government.

Subsequently, from S.S. 1683, A. D. 1763, the female named Matthu-Tiruvayi-nachiyar, being the elder sister of the above-mentioned Sethupathi, ruled the country. when she had thus held the authority for six years the Nabob of Arcot, named Mahomed-Ali-Khan-Saheb-Bahader, conquered the Ramned country, and imprisoned the female Mutthu-Tiruvayi-nachiyar, who had before ruled, together with all her relatives; and, carrying them to Trichinopoly, put them into prison there. After having been imprisoned at that place for twelve years, the said female Mutthu-Tiruvayi-Nachiyar died. Subsequently in S. S. 1701, A. D. 1780, by order of the English government at Chennapatnam (Madras), the Arcot Nabob, Mahomed-Ali-Khan-Saheb, sent Mutthu-Rama linga-Sethupathi, the son, and Mangalesvara-Nachiyar, the daughter. of the before-mentioned Mutthu-Tiruvayi-Nachiyar; and both sister and brother ruled together. In the fifteenth year of this rule the English government put Ramalinga-Sathupathi into prison, on account of his very bad conduct; and, causing him to be taken away from Ramnad, confined him at Trichinopoly. the daughter of his eldest sister, Mangalesvara-Nachiyar, was crowned in S. S. 1716; A. D. 1795; and her government continues down to the present time.'Vide, William Taylor's Oriental Historical Manuscripts- vol. 11, Appendx, G. P. 49.

ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம்.

தபால் சார்ஜ் உள்பட ரூபா 1—8—0.

கொஞ்சங் காப்பிகளே கையிருப்பு.

சண்டையில் தோற்ற வரசர்கள் படுப்பாடு.

புறப்பொருள் வெண்பாமாலை,
வஞ்சிப்படலம், 16-வது செய்யுள்.

"சுற்றிய சுற்றமுடன் மயங்கித்தம்வயி
றெற்றிமடவா ரிரிந்தோட-முற்றிக்
குரிசிலடையாரைக் கொண்ட கூட்டெல் [லாம்
பரிசின் முகந்தனபாண்."

(இ-ள்) "சூழ்ந்த பெருங்கிளை ஒக்கக்கலங்கித் தத்தம் வயிற்றிலே அடித்துக்கொண்டு மகளிர் கெட்டோடப் பகைவர் நாட்டை வளைத்துத் தலைவன் சத்துருக்களைப் பறித்துக் கொண்ட பொருள் முழுதும் தாம் பெறும் பேறாக முகந்து கொண்டனன்" என்பதாம். இப்பகுதியில் தோல்வியுற்ற அரசர்களது சுற்றத்தார், இராஜாங்க மாறுதல் காலத்தில், மனங்கலங்கி, வயிற்றிலடித்துக்கொண்டு ஓடிவர் என்பதற் கியைய; பாண்டியன் வடுகரசனாகிய விஸ்வநாத நாய்க்கரிடம் தோல்வியுற்றதும், அவன் வம்சத்தவர்களாகிய நாடார்கள், திருவிதாங்கூரிற் குடியேறியும், திருநெல்வேலியின் தென்பாகத்தில் ஒதுங்கியும் வாழ்ந்தனர்.

புறப் பொருள் வெண்பா மாலை.
உழிஞைப் படலம், 26-வது செய்யுள்.

"எழுதெழில் மாடத்திடனெல்லாநூறிக்
கழுதையேர் கையொளிர்வேல் கோலா-வழுததற் பின்
வெள்வரகு கொள்வித்திடினும் விளியாதாற்
றன்னிவு தாரான் சதம்"

(இ-ள்) சித்திர மெழுதிய அழகிய மாளிகை முழுதும் இடித்துக் கழுதையே ஏராகவும் கையில் விளங்கும் வேலே கோலாகவும் உழுது அதற்குப் பின்பு கவடியும், குடைவேலும் வித்தினும் கெடாதால், தேன்கலந்த மாலையினையுடையவன்கோபம்," என்பதாம். கவடி= பலகறை, உண்ணு வரகு எனவுங் கூறுவர். குடைவேல் என்பது உடைமரம். இப்பகுதியில் அரசர்கள் பகை அரசர்கள் நாட்டைப் பிடித்ததும், அதிலுள்ள அரண்களைப்பிடித் தெரித்து, அங்கு பலகறைகளும், உடை மரங்களும் முளைய வித்திடுவார் என்பதற் கியைய; வடுகரசனாகிய விஸ்வநாத நாய்க்கன் பாண்டிய நாட்டைப் பிடித்ததும், அந் நாட்டிலுள்ள சிற்றரசர்களை யெல்லாம் ஒடுக்கி, அவர்கள் வாழ்ந்திருந்த, கொற்கையைச் சூழ்ந்துள்ள காடுகளில் பிரவேசித்து, அதிலுள்ள அரண்களைபிடித்து, உடைமரத்தை விளைவித்தனன் போலும். அவ்வுடை மரங்களை நாடார்கள் நிலவுரிமை ஆதிபத்தியம் பெற்ற "குட்டம், காயாமொழி, ஏரல், படுக்கப்பத்து, கச்சினுவிளை" முதலிய ஊர்களில் ஏராளமாக இன்றுங் காணலாம். அப்படி பகையரசர்களால் பிடிக்கப்பட்ட பாண்டிய குல நாடார்களின் பலர் தங்களது ஆதிபத்திய வுரிமையை விட்டொதுங்கிய காலத்து, ஜீவனார்த்தத்தின் பொருட்டு பலதொழில்களையும் புரிந்து வந்தனர். அவற்றுள் சிலர் கள் தொழிலையுங் கையாண்டு வந்தனர்.

இச்சான்றோர்கள், கள்தொழில் புரிதலை நேரிற் கண்ட, திருமலை நாய்க்கர் காலத்திருந்த குமர குருபர சுவாமிகள், மதுரைக் கலம் பகத்தில் "சான்றாண்மை" என்பதற்கு "கள்" என்னும் ஒரு பொருளையுந் தந்தெழுதியுள்ளார். அஃது வருமாறு:—

மதுரைக் கலம்பகம்,
24-வது பாட்டு
கள்ளுண்டு களித்தவன் கூறுவதாகக் கவிகூறல்.

அழகுற்றதொர் மதுரேசனை யமரேசனெனக்கொண்
டாடுங்களியானின் றிசைபாடுங் களியேயம்யாம்
பொழுதைக்கெ கலமூறலைத்தேறற்பனையினைநாம்
போற்றிக்கு [illegible] திக்கிணைசாற்றத் தருமப்பா
பழுதற்றதொர் சான்றாண்மை பயின்றாரிதின் முயன்
பலமுண்டினலமுண்டெவரறிவார் பலகலைது [ரூர்
லெழுதப்படுமேடுண்டது வீடுந்தரவற்று
லெழுதாததொர் திருமந்திரமினம் பாளையுளுண்டே.

(இ-ள்) அழகு உற்றது ஓர் மதுரேசனை-அழகுவாய்ந்த ஒப்பில்லாத மதுரை நகரிலெழுந்தருளிய இறைவனை, அமரேசன் என்ன-பூசித்து வாழ்த்தும் இந்திரன்போல, கொண்டாடும் களியால்-கொண்டாடுங் களிப்பால், நின்று

இசைபாடும் களியெம் யாம்-இன்று இசை பாடுங்களிப் பிணையுடையேம்யாம், பொழுதைக்கு இருகலம் ஊறும்-ஒருநாளைக்கிரண்டு கலமூற்றெடுக்கும், பைந்தேறல் பனையினை -பசிய கள்ளையுடைய பனைமரத்தினை, நாம் போற்றி-நாம் துதித்து, குருமூர்த்தித்து இணை சாற்றத்தகும்- குருமூர்த்திக்கொப்பாக நாம் சொல்லக்கூடும், (அதெப்படியெனில்,) அப்பா- அப்பா நான் சொல்லக்கேள்; இதில் முயன்றூர் -இம்பனைமரத்தின்கள் முயன்றோர்கள், பழுது அற்றது ஓர் சான்றாண்மை பயின்றார் - குற்ற மற்ற ஒப்பில்லாத சான்றோர், (குருமூர்த்திக் கண் பயில்வோர் குற்ற மற்ற ஒப்பில்லாத அறிவால் நிறைந்தோர்;) பலம் உண்டு - களி யுண்டு (குருமூர்த்தியாற் பெரும்பலனுண்டு) அதில் நலம் உண்டு - அப்பலத்திலுமேம் பட்ட நலனுமுண்டு; அறிவார் எவர் - இதனை நன்மை யன்றியறிவாரெவர், பலகலை - அறுபத்து நான்கு கலைகளும், நூல் எழுதப்படும் ஏடு உண்டு-ஆகம முதலிய நூல்களும் எழுதப்படும் பல ஏடுகள் பனையிலுண்டு. (குருமூர்த்தியிடத் திலுமுண்டு) அதுவீடும் தரவற்று அவ்வேடு வீடுபேறையும் வல்லது (குருமூர்த்தியினிடத் துள்ள ஏடுகள் மோட்சத்தையுந் தரவல்லது) எழுதாத ஓர் திருமந்திரம் இப்பனையில் உண்டு (அப்பனையிடத்துள்ள இளம் பாளையில் எழுதுதற் கியலாத ஓர் திருமந்திரம் உள்ளது.) எழுதற்கியலாத ஓர் திருமந்திரம் குருமூர்த்தி யிடத்துள்ளது.

பாளையினிடத்துள்ள சாம்புளின் முனை கழி போலிருத்தலால் எழுதாததோர் திருமந்திரம் உள்ளதென்றார்.

இச்செய்யுளில் குமரகுருபர சுவாமிகள் "சான்றாண்மை" என்பதற்கு சிலேடையாக "அறிவால் நிறைந்தோர், கள் தொழில் புரிவோர்" என்னும் இருபொருள் விளங்கவைத்துள்ளார். இவற்றுள் "சான்றாண்மை" என்பது "அறிவு" என்னும் பொருளைத் தருமெனக் காட்ட அநேக நூற்கள் உண்டு. ஆயின் "கள்" என்னும் பொருளைத் தருமெனக் காட்ட, அம் மதுரைக் கலம்பக மன்றி, அதற்கு முற்பட்ட நூற்களிலாவது, அதற்குப் பிற்பட்ட நூற்களிலாவது காட்ட முடியாது.

அக் குமரகுருபரசுவாமிகள் பாண்டிய நாட்டிலே, தாமிரபரணி நதிக்கரையிலே, ஸ்ரீ வைகுண்டம் என்று வழங்கும் கைலாச புரத்திலே பிறந்து வளர்ந்தவர். அவரது காலம் பாண்டிய ராஜாக்கள் அரசொழிந்து ஒரு நூறுவருடத்திற்குப் பிந்திய காலமாகும். அதாவது A. D. 1623-ம் வருடத்திலிருந்து, A.D. 1659-ம் வருடம் வரைக்கும் அரசுபுரிந்து வந்த வடுகரசரில், 7-வது பட்டத்தாராகிய திருமலை நாய்க்கரது காலத்தவரும், அவரது ஆஸ்தான பண்டிதருமாவர். இவர் காலத்தில், அப்பக்கத்தில் அரசிழந்து ஒதுக்கப்பட்ட சான்றார்கள் பல மாறுதலடைந்து, ஜீவனார்த்தத்தின் பொருட்டு, பல தொழில்களோடு, கள் தொழிலையும் சிலர் கைபற்றி வந்தனர். அதைநேரில் பார்த்த சுவாமிகள் சான்றாரை, கள் தொழிலாளராக வெண்ணிப் பாடினர். இவ்வளவேயன்றி, "சான்றாண்மை" என்பது "கள்" என்னும் பொருளைத்தருமென வெண்ணி பாடியதல்ல- ஆகவே, அது பிரமாணமாகாது.

"Those of the invading force who escaped slaughter were carried away into captivity, and being in turn unsuccessfully employed first as cultivators, then as wood cutters and again as grass cutters to the royal elephants, the ultimately elected to be braziers, and braziers they are still.' Vide, W. W. Hunter's Imperial gazetteer of India, Vol. 1, P. 358.

"சண்டையில் வெட்டப்பட்டு, கொலைக்குத் தப்பித்துக் கொண்ட, அரசர்களைச் சிறையாக்கப்பட்டு, அவர்களை பயிரிடும்படியாகவும், கட்டை வெட்டும்படியாகவும், யானைக்குப் புல்லறுக்கும்படியாகவும் வற்புறுத்தினார்கள். கடைசியாக அவர்கள் கள்ளுத் தொழிலைக் கையாண்டு வந்தனர்கள். அவர்கள் இப்பொழுதும் கள்ளுத் தொழிலாராகவிருக்கின்றார்கள்"

என அண்டர் துரை அவர்கள் கூறியிருக்கின்றார். இப்பகுதியிற் கூறியவாறு சண்டையிற் றோற்றவர்கள், பலவாறாக அலக்கணுற்று, கடைசியாகக் கள்ளுத் தொழிலில் பிரவேசித்ததைப்போல்; வடுகரசரால் அலக்கணுற்ற நாடார்களும், பல தொழில்களோடு, கள் தொழிலிலும் பிரவேசித்தனர். கள்ளுத் தொழிலைச் செய்யும் அரசர்கள், கள்ளரது சாதிப்பெயர்களைப் பெறுதிருத்தலைப் போல்; கள் தொழிலைச்செய்யும் சான்றார்களும், கள் தொழிலினருக்குரிய சாதிப்பெயர்களைப் பெறுதிருக்கின்றனரென வறியலாம். (ப-ர்.)

தன் பொறுப்பு.

“கட்டிக் கொடுத்த அமுதும் சொல்லிக் கொடுத்த புத்தியும் எத்தனைநாள் வரும்” என்றும் உலகத்தார் சொல்லுவதை நாம் கேட்டிருக்கிறோம். இச்சொற்கள் வெகு உண்மையான சொற்கள். தாய் தந்தையர்கள் புத்தி புகட்டி நடத்துங்காலம் சொற்பகாலம். நாம் நமது சொந்த விஷயங்களைச் செய்யத் தெரியாது வகையற்று வெகு சிறுவர்களாயிருக்கிற வரையில், நமக்கு உடை உடுத்துவதும் புசிப்பு ஊட்டுவதும் நம்மைத் தூக்கி எடுப்பதும் நமது தாய் தந்தையர்கள் உதவியாலாகின்றன. அதே மாதிரி நமது குருவும் நண்பர்களும் நமக்குப் புத்திசொல்லி அறிவுபுகட்டி நம்மை நடத்துங் காலஞ் சொற்பகாலம். இக்காலம் கழிந்த பின்பு ஒவ்வொருவரும் தம்மைத் தாமே இவ்வுலகத்தில் நடத்திக்கொள்ளும் காலம் வருகின்றதல்லவா? இக்காலம் 14-வது வயது முதல் 20-வயதுக்குள் என்று சொல்லலாம். அதுவரையில் நாம் பொறுப்பற்ற சிறு குழந்தைகளாக விருந்தோம். சட்டங்களிற்கூட 12-வயதுக்குள் ஒரு குழந்தை ஒரு குற்றஞ் செய்துவிட்டால் அது சிற்சில சமயங்களில் குற்றமாகாதென்று விதித்திருக்கின்றது. குழந்தைகளாயிருந்த வரையிற்றான் மற்றவர்கள் பொறுப்பில் நாமிருந்துவிட்டோம். தன் பொறுப்பு தனக்கு வந்த பிறகு ஒருவன் மற்றொருவனுக்கு அடங்குகிறவனாக மாட்டான். தன் செயலுக்குத் தானே உத்தரவாதியாகின்றான். அவனிஷ்டப்பட்டால் ஈசுவரனுக்குக்கூட அவன் அடங்கி நடக்கவேண்டியதில்லை. ஆகையால் இவ்விதமாகத் தன் பொறுப்பு வரும் பருவம் அதாவது 14-வது வயது முதல் 20-வயதுக்குள்ளாகிய காலம் ஒவ்வொருவன் ஆயுளிலும் வெகு சிலாக்கியமான காலம். ஒருவனை நற்பதவிக்குக் கொண்டு வருகிற காலமும் அதுதான்; ஒருவனைக் கெடுக்கிற காலமும் அதேதான். இதன் நுட்பமான அர்த்தமாவதென்ன? என்னை மேன்மையாக எண்ணிக்கொள்ளவோ அல்லது என்னையே நான் கெடுத்துக்கொள்ளவோ இப்பருவத்தில் நான் சர்வாதிகாரம் பெற்றிருக்கிறேன் என்றபடி, இப்பருவம் நமக்கு வந்ததும் நம்முன் ஒவ்வொருவரும் வெகு நாகரிகமான நிலைமையில் தத்தளிப்பவர்களாகின்றோம். ஒவ்வொரு நிமிஷமும் நாம் செய்யப்புகும் வேலைகளில் இவ்வாறு செய்வது நியாயமா அநியாயமா என்பதை நாமே நிச்சயித்துக்கொள்ளும் பதவியில் வந்து விடுகின்றோம். நமது தேகப்பயிற்சி, படிப்பு, உழைப்பு, வேடிக்கை, சிநேகம், விவகாரம் எல்லா விஷயங்களிலும் நாமே நமக்குள் இவ்வாறு செய்வது உத்தமம் அவ்வாறு செய்வது குற்றம் என்று நிச்சயித்துக்கொள்ளுகின்றோம்.

இவ்வண்ணம் நமது பொறுப்பால் நாம் நியாயத்தை நியாயமாகவே பார்த்து இறங்கிவிடுவோமேயானால் அதுதான் நாம் மேன்மேலும் அபிவிருத்திக்கு வருவதற்கு ஓர் பெரும் அத்தாக்ஷி; அதற்குப் பதிலாக அக்கிரமத்தைக் கிரமமாகவும் அநியாயத்தை நியாயமாகவும் நமது பொறுப்பால் கருதி குற்றமான நிச்சயங்களைக் கைக்கொண்டு ஒரு விஷயத்தில் இறங்கிவிடுவோமேயானால் அத்துடன் நமது க்ஷேமம் அப்பொழுது தொலைவது மல்லாமல் நாளுக்கு நாள் நாம் சங்கடங்களில் சிக்கிக்கொண்டு வெகு கஷ்டதசையில் வீழ்ந்து பரிதவிப்போம்.

"ஒரு கோடியில் அழிந்த கற்பு ஒரு யுகமானாலும் திரும்பி வராது" என்றபடி, தன் பொறுப்பு வந்தகாலத்தில் நாம் ஒரு விஷயத்தில் தப்பி நடந்து அக்கிரமத்தில் இறங்கிவிட்டால் அக்குற்றத்தை நாம் மறுபடியும் சீர்திருத்திக் கொள்ளவே முடியாதாகையால் இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் வெகு சவனமாயிருக்க வேண்டும்.

இன்னும் சிலர் தன் பொறுப்பு வந்தபிறகும் பிறர் உதவியையும் செயலையும் கொண்டு தன் காரியங்களைச் செய்ய ஆரம்பிப்பார்கள்; அம்மாடித்தன்; அப்பாடிமித்தன்; மித்திரன் டித்தன்; மந்திரி டிமித்தன் என்ற சிலர், (இவ்விதமான புருஷர்களுடைய பட்டத்தின் அருத்தம் என்னவென்னில்) அம்மா சொல்லுகிறபடி நடக்கிறவன்; அப்பா சொல்லுகிறபடி நடக்கிறவன், ஒரு சிநேகிதன் புத்திப்படி நடக்கிறவன்; ஒரு மந்திரி புத்திப்படி நடக்கிறவன் என்பதாம். இவ்வாறான அம்மா, அப்பா, மித்திரன், மந்திரி இவர்கள் நல்லவர்களாகவிருந்து நல்வழியிலேயே ஒருவனை நடத்தினபோதிலும் அவனுக்கும், கடிகாரத்தில் நாம் நமதிஷ்டப்படி திருப்பி வைத்து ஓட்டும் நிமிஷமுள்ளுக்கும் வித்தியாசமே இல்லை. தன் சுயபுத்தியைக் கொண்டு ஒரு காரியம் செய்யச் சக்தியற்று மற்றவர்கள் உதவியை நாடுகிறவன் மனிதனல்ல; மனித வடிவங்கொண்ட ஒரு கருவியாவான்.

நீ முன்னுக்கு வர உனக்கு மனமிருந்தால் நீ ஒரு தீரனாவிருக்கவேண்டும். உன் பொறுப்பும் உன்னறிவும் உன் உள்ளத்திலிருந்தே உதிக்கவேண்டும். வெளியார்கள் பூசும் மேல் பூச்சு ஒரு பிரயோஜனமும் தராது. பெரிய வம்சத்தில் பிரபுக்களின் குழந்தைகள் சிற்சில சமயங்களில் மற்றவர்கள் சொற்கேட்டு நடப்பவர்களாய் ஆகிவிடலாம். கஷ்டதசையிலிருந்து அவஸ்தைப்பட்டு முன்னுக்கு வருகிறவர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் சொற்கேட்டு நடக்காமல் தங்கள் பொறுப்பைக் கொண்டு நடப்பவர்கள் என்பது சாஸ்திரம்.

இதுவுமன்றித் தன் பொறுப்பால் ஒரு காரியத்தை நடத்தாமல் மற்றவர்கள் உபதேசத்தால் நடத்தப்பட்டவர்கள் தங்கள் வேலையைத் தாங்களே செய்யச் சோம்பேறிகளாய் மற்றவர்களிடம் ஒப்புவைத்துச் சுகப்படும் துட்ப அறிவுள்ளவர்களாய் அபவாதம் பெறுவார்கள். இவர்கள் ஒருபொழுதும் சுகப்பட்டவர்களல்லர். சுகப்படுவதாக இவர்கள் எண்ணுவது தப்பிதமான கொள்கை. ஏனெனில், இருவர்கள் எப்பொழுதும் எவ்விஷயத்திலும் ஒரேவித நிச்சயத்துக்கு வரவே மாட்டார்கள். சொற்ப காலம் ஒரேவழியில் நடந்து அப்புறம் எப்பொழுதாவது பிரிந்தே தீரவேண்டும். முதல் முதல் அவ்வாறு பிரிவதால் உண்டாகும் வித்தியாசம் வெகு துட்பமாயிருக்கும். நாளாக நாளாக இவ்விருவர்களும் முற்றிலும் வித்தியாசப்பட்டுச் சொற்பேனும் ஒவ்வாமல் நடப்பவர்களாவார்கள்.

கப்பலை நடத்துவோன் தலைமைபூண்டு நடத்தினாலன்றிப் பெரும் புசலடிக்கும் பொழுது தலைவன், இப்பாயை யிறக்கென்றால் அவன் நண்பன் 'வேண்டாம் இப்பாய் இப்படியே இருக்கட்டும்' என்றால், அப்புறம் அம்மரக்கலம் எவ்வண்ணம் முழுகாமலிருக்கும்? அதுபோலவேதான் தன பொறுப்பு வந்தபின்னர், தன் புத்தியால் சரியான வழியில் நடப்பவன் முன்னுக்கு வருவான்; மற்றவர்கள் புத்தியைக் கொண்டு நடப்பவன் மேற்கூறிய மரக்கலம் போல நாசமடைவான்.

பழக்க வழக்கங்கள்.

—(S)—

முட்டாக்கு இடும் வழக்கம்:—இவ்வழக்கம் நம் தென்னாட்டில் என்றும் இருந்ததில்லை. இங்கு தற்காலத்திலும் சில சாதியாரிடம் இவ்வழக்கம் இருக்கின்றதேயெனின், அவ்வழக்கமுடையார் எல்லாம் வடநாட்டினராவர். ஆனால் வடநாட்டிலோ இந்துக்களும் மகமதியாரும் இவ்வழக்கத்தைப் பெரிதும் அனுசரித்து வருகின்றனர்கள். அங்கும் இவ்வழக்

சம் பண்டைகாலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. மகமதியர் இந்த ஸ்தானத்தில் புகுந்து பல அக்கிரமங்களைச் செய்யத் தொடங்கிய காலத்து, இவ்வழக்கத்தை இந்துக்களும் அனுசரிக்கத் தொடங்கினர் என்பது பலருடைய அபிப்பிராயம். ஆனால் மகமதியருக்கோ இது ஒரு முக்கிய வழக்கமாகக் காணப்படுகின்றது.

இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்ட மகமதிய அரசாங்கத்தில் இந்துக்கள் மகமதியரோடு நெருங்கிக்கலந்து புழங்கியதால், அம் மகமதியர் வழக்கமாகிய முட்டாக்கு இட்டுக்கொள்ளுவதை இந்துக்களும் கையாண்டு வந்தனர். வடதேசத்தில் இன்னும் சில இந்துஜாதி ஸ்திரீகளுக்கு தலை மூடுவதில் இருக்கும் அக்கரை, அவர்கள் மார்பையும், வயிற்றையும் மூடுவதில் அவ்வளவு அக்கரையில்லை. இது அவர்களது நீண்ட வழக்கமாக விருக்கின்றது. இவ்வழக்கத்தை தற்காலத்திலும் அவசியமென்று ஒருவரும் கூறத் துணியார். அவசியமில்லாத ஒரு காரியத்தைப் பழக்க காரண மாகவே வழங்கி வருவது மனிதருள் சகஜமாகவிருக்கின்றது. அவ்விதபழக்கத்திலிருந்து விலகுங் காலத்தில் கஷ்டங்கள் பல சகஜமாகவேற்படும். இது உலக அனுபவம். இதைப்போல் திருவாங்கூரின் வடக்கில் குடிபுகுந்த நாடார்களின் தன்மையுமாகும். திருவிதாங்கூர் மலையாளப் பகுதியைச்சேர்ந்தது. இத் திருவாங்கூரின் வட பாகத்தில் ஏறக்குறைய நானூறு வருடங்களுக்கு முன், வறுமையால் துரத்தப்பட்ட நாடார்கள் குடியேறி வாழ நேர்ந்தனர். அந் நாடார்கள் மலையாளர் மத்தியில் நாலைந்து தலைமுறைகளாக கலந்து வாழ நேர்ந்தமையின், அம்மலையாளர்களது வழக்க பழக்கங்களையும் வசமாக்கி [illegible].

The fact seems to be that successive waves of immigration brought from the Canarese and Tamil Countries different Castes and different tribes; and these, settling down in the Customs and manners, and assumed the Caste names of the more respectable of the Comunity that surrounded them. This process of assimilation is going on even yet. Chettis of Coimbatore, for example, who settled in Palghat and Valluvanad within living memory, have develaped by this time into Nayars. In the Census schedules we find instances in which the males of a house affix the term Nayar to their names, while the names of the females end in Chettichi. Gollas entering the country from the north have similarly, in Course of time, assumed Nayar Customs and mannars and are now styled Nayars." Vide, Thurston's Castes, and Tribes of Southern India, Vol. IV, P. 284.

"மலையாளத்தில் தமிழ் தேசத்திலிருந்தும், கன்னடதேசத்திலிருந்தும் குடியேறிய பல சாதியார்களும், நாயர்களது வழக்கப் பழக்கத்தைப்பின் பற்றிவருகின்றார்கள். கோயம்புத்தூரிலிருந்து குடியேறிய செட்டிகள் நாயர் பட்டத்தைத் தாங்கிவருகின்றார்கள். ஆனால் அவர்களது பெண்கள் மாத்திரம் செட்டிச்சிகள் எனவே அழைக்கப்பட்டு வருகின்றார்கள். கொல்லர்கள் நாயர்பட்டத்தோடு, அவர்களது வழக்க பழக்கங்களையும் அனுசரித்து வருகின்றார்கள்" என் தர்ஸ்டன் துரை அவர்கள் கூறியுள்ளார். இவர்களைப் போல் திருவாங்கூரில் குடியேறிய நாடார்களும் நாயர்களது வழக்க பழக்கங்களைப் பின்பற்றிவந்தனர். அவற்றுள் பெண்கள் மேல் ? போடாமலிருந்தலும் ஒன்று. இது நாளதும் நாயர்களது வழக்கமாகவிருந்து வருகிறது. அவ்வழக்கை குடியேறி வாழ்ந்து வந்த நாடாத்திகளும் அனுசரித்து வந்தனர். அப்படி அனுசரித்து வந்தவர்கள் மேற்றிசைக் கல்வி பரவப் பரவ, அவ்வழக்கத்தை யொழிக்கத் துணிந்தனர். இதுவே வழக்கப் பழக்கத்தின் தன்மையாகும். இதோடு, 1925௵ [illegible]த்தில் வெளியான "மலையாளமேல் சீலைப்போடல்" என்னும் விஷயத்தையும் கவனிக்க. பத்திராதிபர்,

குடியிருக்கும்வீடே கோட்டை.

அவனவன் குடியிருக்கும்வீடே அவனவனுக்கு அரணான கோட்டை என்று இங்கிலாந்துத் தேசத்து சட்டத்தில் நெடுங்காலமாக ஒரு பழமொழி வழங்குகின்றது. அத்தேசத்தில் நடந்த ஒரு வியாச்சியத்தினால் இந்தப் பழமொழி உறுதிப்படுத்தப்பட்டது. அதென்னவெனில், அந்த வியாச்சியத்திற்குப் பிரதிவாதியும் மற்றொருவனும் லண்டன் நகரத்தில் ஒரே வீட்டிலே கூட்டுக்குடியிருந்தார்கள்.

அந்தப் பிரதிவாதி இக்காலத்துப் பல சிறுவர்களைப்போலவே அதிக செலவாளியாயிருந்து கையில் காசில்லாமல் வாதியினிடத்தில் கொஞ்சம் தொகை கடனாக வாங்கலானான். கடன் வாங்கின சிலகாலத்திற்கெல்லாம் அவனுடன் கூட்டுக்குடியிருந்தவன் இறந்துபோனான். அதனால் அந்த வீடு முழுமையும் இந்தப் பிரதிவாதியின் சுவாதீனமாகிவிட்டது. ஏனெனில், கூடிக் குடியிருப்பவன் இறந்துபோனால் அவனுடைய பங்கு மற்றவனுக்குச் சேருகிறதென்பது அக்காலத்து ஏற்பாடு. இறந்துபோனவனுக்குச் சில சொத்துக்கள் அந்த வீட்டிலிருந்தன. அதுகண்டு பிரதிவாதிக்குக் கடன்கொடுத்தவன் தன் கடனுக்கு அந்தப் பொருளைத் சரிப்படுத்தி யெடுத்துக்கொள்ளலாமென்று நிச்சயித்து, அப்படியே அந்தப் பொருளைத் தனக்கு வாங்கிக்கொடுக்கும்படி அவ்விடத்து அதிகாரிகளை வேண்டிக்கொண்டான். அவர்கள் அப்படியே அவனுடைய பாத்தியதையை நிறைவேற்ற அவ்வீட்டிற்கு வந்தார்கள். இப்பொழுது அந்தச் சொத்துகளெல்லாம் பிரதிவாதியின் பொருளல்லவா? அவன் சட்டத்தின் சொரூபம் தெரியாதவனன்று; நமது வீட்டில் வந்து நுழையும்படியான தைரியமுடையவனெவனென்று அவன் உடனே கதவைப் பூட்டிக்கொண்டு, வந்த அதிகாரிகளைப் பார்த்து, நீங்கள் நியாயவிரோதமாக நடத்தலாகாது; ஏழைவிஷயத்தில் தயைசெய்ய வேணுமென்று வேண்டிக் கொண்டான். அதைக் கேட்டுக் கொண்டு அவர்கள்போய்விட்டார்கள். விமேனி என்னும் வாதி இவ்வளவு சுலபத்தில் சும்மா விடுகிறவனல்லன். அதன்மேல் அவன் 'நியாயமாய் என்சொத்தை நான் கைக்கொள்ளப் போகையில் இவன் தடைசெய்தான்' என்று உடனே பிரதிவாதியின்மேல் வழக்கு தொடுத்தான். ஆயினும் அவனது இஷ்டம் ஈடேறாமல் அந்த வழக்கு தள்ளப்பட்டது. ஏனெனில், ராஜப்பிரதிநிதிகளான பெரிய அதிகாரிகளானாலும். கிரமமாகவே நியாயம் செலுத்தப் போனாலும், ஒருவனுடைய சுவாதீனத்திலிருக்கிற வீட்டில் அவனுடைய அனுமதியில்லாமல் பலாத்காரமாகப் பிரவேசிப்பதற்குச் சிறிதும் நியாயமில்லையென்று நியாயாதிகாரிகள் தீர்மானித்தார்கள்.

மேற்பார்வையாகப் பார்ப்பவர்களுக்கு இந்தத் தீர்மானம் அவ்வளவு முக்கியமாகத்தோன்றாது. திட்பமாக விசாரித்தால் இது 'அவனவன் குடியிருக்கும் வீடே அவனவனுக்குக் கோட்டை' என்கிற பெரிய உண்மையை ஸ்தாபித்ததாகையால், மிகச்சிறந்த தீர்மானமென்று சொல்லச் சிறிதும் தடையில்லை. 1605-ம் வருஷத்திற்குமுன் இந்த உண்மை விசேஷமாக வழங்கப்படவில்லை யானாலும் ஆசாரத்திலே மாத்திரம் அதிகமாகவே வந்துகொண்டிருந்தது. முற்காலத்தில் இது அவசியம் வேண்டியதாகத்தான் இருந்தது. ஏனெனில், அக்காலத்தில் வீடுகளும் குடிகளும் அதிகமாக நெருங்கியிராமையால் எல்லாம் சட்டப்படி சரியாக நடப்பது அருமை. அதனால் ஒவ்வொருவனும் தன்னுடைய பொருளைத் தானே பத்திரமாகக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனது பற்றி, அவனவன் வீட்டிற்கு அவனவனே ராஜா என்று இப்படி ஒரு நிபந்தனை ஏற்படுவது அவசியமாயிற்று.

எந்தப் பொதுவிதியானாலும் அதற்கு விலக்குகள் இருக்கவேண்டுமல்லவா? அப்படியே இதற்குமுண்டென்பது அந்தச் சட்டத்தால் ஏற்பட்டிருக்கிறது. நியாயாதிகாரியின் தீர்மானமிருந்தால், அதை நிறைவேற்றவந்த முத்திரை பெற்ற சேவகன் அந்த வீட்டிற்குள் பிரவேசிக்கலாமன்றோ? அதுவும் சமாதானமாகவே நடத்தவேண்டும். கதவையாவது பலகணிவாயிலையாவது பெயர்த்துக்கொண்டு உள்ளே நுழையலாகாது. குற்றங்களைப்பற்றிய சட்டத்தைச் சேர்ந்த வியவகாரமாயிருந்தால் பலவந்தமாகவும் உள்ளே நுழைய இடமுண்டு. அதிலும் வீட்டுக்காரனுக்கு முன்னதாக அறிக்கை செய்யவேண்டும். அவன் அதற்குத் தடங்கல்செய்தால் அதன்மேல் அதிகாரப்படி நடத்தலாம்.

மேலும் வீட்டுக்கு உடையவன் தனக்குச் சேரவேண்டிய குடிக்கூலிக்காக சாமான்களை ஜப்திசெய்ய வீட்டிற்குள் நுழையலாம். ஆனால் அவனுக்கும் சில நிபந்தனைகளுண்டு.

96-வித நேத்திர வியாதிகளுக்கு, களாகா தைலம்.

1-புட்டி தபால் கூலியுள்பட 1—6—0 3-புட்டி தபால் கூலியுள்பட 3—0—0

இது பி. எஸ். ஜெகத்குரு அவர்களால் கண்டுபிடித்த ஓர் நேத்திர சஞ்சீவிமூலிகை. அந்தமூலிகையால் இந்த தைலம் இறக்கப்பட்டது. சாதாரணமாய் நம் வழக்கம் பிரகாரம் நல்லெண்ணெயில், 30 துளி இந்த களாகா தைலத்தை விட்டு கலக்கி, தலையிற் தேய்த்துக்கொண்டு 5 நிமிஷம் வரையில் தலையிற் தைலம் ஊறிய பிறகு சீக்காய் அல்லது அரப்பை கொண்டு தேய்த்து ஸ்நானம் செய்யவும். இப்படி வாரத்திற்கு இரண்டு ஸ்நானம் செய்து வந்தால் அடியிற் கண்ட வியாதிகளை சௌக்கியப்படுத்தும். இந்த தைலத்தை அநேகர் உபயோகித்து இதன் சிறந்த குணத்தைப்பற்றி சந்தோஷப்பட்டு மாதம் மாதம் வாங்கி உபயோகிக்கிறார்கள் சொற்பவிலைதான் யாதொரு பத்தியமில்லை.

(தீரும் வியாதிகள்.)

1. கண்கள் குளிர்ச்சியாயிருக்கும். 2 உஷ்ணத்தினாலாவது சீதளத்தினாலாவது உண்டாகும் ஜலப்பு. 3 மார்சளி. 4 நீரேகச்சூடு. 5 காங்கையினால் உண்டாகும்சளி 6 சொறியுண்டாகும் தினவு. 7 காசத்தினாலாவது, மயிர் உதருகிறது. 8 பித்தத்தினால் தலையெரிவத்தம். 9 உஷ்ணத்தினால் மெரிவத்தம். 10 பித்தத்தினால் தலை சுற்றுகிறது. 11 கைகால் எரிவத்தம். 12 உடம்பெல்லாம் மெரிச்சல். 13 தேகம் பளுவாயிருத்தல் 14 கண்கள் எரிச்சல். 15 கண்ணோய். 16 கண்ணில் தண்ணீர் வடிதல். 17 கண் மஞ்சளாயிருப்பது. 18 கண்ணில் நமைச்சல். 19 பித்த நீரினால் கண் காலேஸ்வரம். 20 எப்போதும் கண் எரிச்சல். 21 கண்ணின் ஓரத்தில் வரும் கட்டிகள். 22 மூட்டுக்கு இல்சன் வியாதி. 23 பசியை எடுக்கும். 24 உடம்பிற்கு அழகையும், முகத்திற்கு வசீகரமும் கொடுக்கும். 25 வெள்ளைமயிர் கருத்துவிடும்.

ஆயிரமேன்! அய்யா கோபத்தால் வரும் 45 வியாதிகளும். பித்த கோபத்தினால் இமையோரத்தில் உண்டாகும் 16 வியாதிகளும், சிலேஷ்மத்தினால் வெள்ளை விழியில் வரும் 20 வியாதிகளும், கடைக்கண்ணினாலுண்டாகும் 15 வியாதியும், ஆக 96 வியாதிகளும் பஞ்சாய் பறந்துவிடும். இந்த தைலத்தை சதா உபயோகிப்பதினால் இன்னொரு அநுகூலமானது, நன்றாய் நித்திரைவரும். சிலருக்கு இரவில் நித்திரைபிடிக்காமல் எந்நேரமும் கனவுகாண்கிறதுண்டு. இதினால் அது நீங்கிவிடும். இதை ஸ்நானம் பண்ணுவதினால் கண்ணாடி யென்ற நாமதேயமில்லாமல் அவ்வளவு நன்றாய் கண்கள் தெரியும். இது எந்த தொத்து வியாதியையும் சேர்க்காது. 10 ஸ்நானத்திற்குவரும். 6 புட்டி வாங்கினால் 1-புட்டி இனாம். 6-புட்டி 5—8—0

சிவனார் அமிர்த சூரணம்.

1 டப்பி தபால் கூலியுள்பட 1—6—0
3 டப்பி தபால் கூலியுள்பட 3—0—0

இந்த சூரணம் பல சித்த மூலிகைகளால் செய்தது இதில் ¼ ரூபாய் இடை எடுத்து கொஞ்சம் சீனி சர்க்கரை கலந்து வாயில்போட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும், இவ்விதமாக காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டால் அடியிற்கண்ட வியாதிகளை எல்லாம் கண்டிக்கும், யாதொரு பத்தியமில்லை.

நமது தேகத்தில் பித்தம் அதிகரிப்பதால் ஏற்படும், தலை மயக்கம் வாய் குமட்டல், வாந்தி, தலை பாரம், கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கபாலம் எரிச்சல், நெஞ்சில் கபம் கட்டுதல் வாயில் நீர் சுரப்பு மார்நோய், மார் எரிச்சல் கைகால் குடைச்சல் எரிச்சல் மலச்சிக்கல், பித்தவாயுவு. பித்த சூடு, பித்த காரிகம் பித்த உஷ்ணம், பித்த பாண்டு, பித்த குன்மம், பித்த மகோதரம், பித்த சீதளம், பித்த காமாலை, பித்த வெட்டை ரத்தபித்தம், நீர்பித்தம், சுரப்பித்தம், ஆம்ல பித்தம், உருத்த க்ஷீண பித்தம், முதலிய 41 விதமான பித்தவியாதிகளை எல்லாம் கண்டிக்கும் கைகண்ட மருந்து நம்பிக்கையானது. மேற்கொண்ட வியாதியுள்ளவர்கள் இந்த சூரணத்தை சாப்பிட்டு வந்தால் ஒரு வாரத்தில் இந்த வியாதிகளை எல்லாம் கண்டிக்கும். வியாதி இல்லாதவர்கள் இதை தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் தாது விர்த்தி அதிகரிக்கும் பித்த வியாதிகளை அணுகவொட்டாது.

சூதகபந்த நிவாரணி.

புட்டி 1-க்கு தபால் கூலியுள்பட விலை ரூ. 1—4—0
புட்டி 3-க்கு தபால் கூலியுள்பட 2—12—0

பெண்களுக்கு பிரதிமாதமும் வரவேண்டிய சூதகம் சரியாய் வராமையால், அதனால் உண்டாகும் வயிற்றுவலி, தேக ஊதல், கைகால் ஊதல், கையால் குத்தல்குடைச்சல், தலைநோய், கழுத்துநோய் இடுப்பு நோய் முதலான சூதகத்தாலுண்டாகும் அநேகமான வியாதிகள் எத்தனைவருஷமாயிருந்தாலும் 3 அல்லது 4-தினத்தில் போக்கடித்து வெகு சந்தோஷத்தை யனுபவிக்கலாம். பிள்ளையில்லா மலடுபற்றிய பெண்கள் ஒரே முறையாக ஏழுநாள் சாப்பிட்டால் தப்பாமல் புத்திரபாக்கியமுண்டாகும் மிகவும் அனுபவமான மருந்து.

வேண்டியவர்கள் அடியிற் கண்ட எமது விலாசத்துக்கு கடிதம் எழுதவும்.

☞ எமது விலாசம்:—

பி. எஸ். ஜெகத்குரு இராஜ வைத்திய நிலயம்,

நெ 22, பூதபெருமாள் முதலி தெருவு,

மவுண்ட் ரோட்டு போஸ்ட், மதராஸ்.